விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-935)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 08 புதன்கிழமை (23.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 004

## 64 தமிழ் அரசியல் கைதிகளுக்கு சிறையில் கொரோனாத் தொற்று

### ஐ.நாவிடம் முறையிட்டார் கஜேந்திரகுமார்



(கொழும்பு)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 64 இற்கும் அதிக மானவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலையை மேற்கோள் காட்டும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள வைத்தியர் ஒருவர் 19

## புதிய வகை கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவும் அபாயம்

### நிபுணர்கள் எச்சரிக்கை

3ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் ரோஹித இன்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

தமிழகம் காரைக்கால் - காங்கேசன்துறை இடையே கப்பல் போக்குவரத்து சேவையை 19

## இரணைமடுவின் இரு வான் கதவுகள் திறக்கப்பட்டன



19

### புதிய பிரேரணை நிறைவேறினாலும்

# இணை அனுசரணை இலங்கை வழங்காது

### வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன



(கொழும்பு)

ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக புதிய பிரேரணை நிறைவேறினாலும் அதற்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்காது என வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜெனிவா விவகாரம் தொடர்பில் கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசு, இலங்கைக்கு எதிரான ஐ.நா.தீர்மானங்களின் இணை அனுசரணையிலிருந்து இவ்வருடம் விலகி விட்டது.

அந்த தீர்மானங் 19

### பண்டிகைக் காலப்பகுதியில்

## ஊரடங்கு அமுல்படுத்த திட்டம் ஏதும் இல்லை

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)

பண்டிகைக் காலப்பகுதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்துவதற்கு எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை என இராணுவத் தளபதி சவேந்திர 19

## கொரோனா உயிரிழப்பை ஆராயாவிட்டால் மரணங்கள் மேலும் அதிகரிக்கும்

### விசேட வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் மரணங்கள் இடம்பெறும் முறை தொடர்பில் முறையான மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிட்டால், எதிர்வரும் காலத்தில் மரணங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று தேசிய புத்திஜீவிகள் 19

### யாழில் கொரோனா அபாயம் நீங்கவில்லை

## பண்டிகைக் காலத்தில் அநாவசியமான நடமாட்டங்களை தவிருங்கள்

### யாழ்.மாவட்ட அரச அதிபர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

பண்டிகைக் காலத்தில் பொது மக்கள் அநாவசியமான நடமாட்டங்களை தவிர்த்து சுகாதார பிரிவினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ்.மாவட்ட 19

## 15 வயது சிறுவன் உட்பட 7 பேர் கொரோனாவுக்கு பலி

### 38 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் கோவிட் - 19 நோயால் 15 வயதுடைய சிறுவன் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு அறிவித்துள்ளது.

இதன்மூலம் நாட் 19

## 6 போதனா சோதனையில் பேருக்கு தொற்று உறுதி

### உரும்பிராயில் ஒருவருக்கு
### கிளிநொச்சியில் இருவருக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் யாழ். மாவட்டத்தில் மேலும் ஒருவருக்கு கொரோனா 19

## குழந்தைகளை விற்பனை செய்த பெண் கைது

(கொழும்பு)

ஆதரவற்ற கர்ப்பிணிப் பெண்களை பராமரிக்கும் தோரணையில் அவர்களுக்குப் பிறக் 19

### கொரோனா தடுப்பூசியை

## இலங்கைக்கு பெற்றுக் கொடுக்க ஐ.நா இணக்கம்

(கொழும்பு)


இலங்கைக்கு கொரோனா தடுப்பூசியை பெற்று கொடுக்க ஐ.நா இணங்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றது.

19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 – 07 – 1934



மறைவு
19 – 12 – 2020

## சின்னவன் கந்தையா
**(பிரபல கட்டட ஒப்பந்தக்காரர்)**

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் கந்தையா கடந்த 19.12.2020 (சனிக்கிழமை) சுவிஸ்சர்லாந்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னவன் - சீதேவி தம்பதியரின் அன்பு மகனும் வைரவன் - மயிலி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் நற்குணபூபதி (சுவிஸ்), மல்லிகா (சுவிஸ்), ஜெயாவதி (சுவிஸ்), சுயாவதி (சுவிஸ்), சுவர்ணசிங்கம்(சுவிஸ்), சுபாசிங்கம் (சுவிஸ்), நற்குணபூபாலசிங்கம் (லண்டன்), ஜெயவீரசிங்கம் (லண்டன்), தர்மகுலசிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமி (சுவிஸ்), றஞ்சன் (சுவிஸ்), வசிகரன் (சுவிஸ்), றமேஸ் (சுவிஸ்), ரசிலத் (சுவிஸ்), சுஜி (சுவிஸ்), சறோ (லண்டன்), லலிதா (லண்டன்), மகேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸ்சர்லாந்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(5030)

தகவல்:-
வ. சின்னத்தம்பி
கைதடி மேற்கு.
கைதடி.
077 869 5492

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஊடகக் கற்கைநெறி
பாட ஆசிரியர் திரு. நி. கஜிதரன் அவர்களின்
அன்புத் தந்தையார்

அமரர் **கந்தசாமி**
## நித்தியானந்தன்

அவர்கள் இறைபதம் அடைந்த
செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(C-993)

ஆசிரியர் கழகம்
யா/யூனியன் கல்லூரி - தெல்லிப்பளை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
ச. விதுசன்
(174)

Congratulations

எமது சங்க உறுப்பினர் ஆ. சதீஸ்
அவர்களின் மகன்
செல்வன்
## சதீஸ் விதுசன்
(J/KARAMPON LITTLE FLOWER'S GIRLS' M.V)

நடைபெற்ற 2020 புலமைப் பரிசில்
பரீட்சையில்
174 புள்ளிகள் பெற்றமைக்கு
எமது சங்கம் சார்பாக
வாழ்த்துகின்றோம்.

(5028)

வாழ்த்துவோர்.
தனியார் பேருந்துச் சேவைச் சங்கம்
(777) ஊர்காவற்துறை (780)

# 48 ஆவது அகவை தீன வாழ்த்துக்கள்

Congrats!
23.12.2020



## திரு. தேவராஜா வைகுந்தன்
(வவுனியா, மன்னார் மாவட்ட
முன்னாள் பிராந்திய முகாமையாளர்,
தென்னை பயிர்ச் செய்கை சபை)

மக்கள் சேவையில் மகிழ்வு காணும்
தங்கள் காலங்கள் 48 ஆண்டுகள் உருண்டோடி - போனாலும்
இன்னும் அதே இளம் துடிப்புடன் மக்களுக்காய் - உங்கள்
பணி இனிதே தொடர புதிய அகவை தினத்தில்
இனிய வாழ்த்துக்கள்.

(C-991)

வாழ்த்துவோர்
வவுனியா மாவட்ட கற்பகதரு சங்கங்கள் - வவுனியா

# 48 ஆவது அகவை தின வாழ்த்துக்கள்



23.12.2020

திரு.
## தேவராஜா வைகுந்தன்
(வவுனியா, மன்னார் மாவட்ட
முன்னாள் பிராந்திய
முகாமையாளர்,
தென்னை பயிர்ச் செய்கை சபை)

மக்களின்
வாழ்வாதாரத்தை
உயர்த்தி மகிழ்வு- கண்டு
ஆண்டுகள் பல கடந்து
போனாலும்
இன்றும் மக்கள்
நலனுக்காய் - உங்கள்
பணி இனிதே தொடர
48 ஆவது - புதிய
அகவை தினத்தில்
இனிய வாழ்த்துக்கள்.

வாழ்த்துவோர்
மன்னார் மாவட்ட கற்பகதரு
சங்கங்கள் - மன்னார்

(C-992)

# புதிய வகை வைரஸ் இலங்கையிலும் பரவும் அபாயம்!

## நிபுணர்கள் எச்சரிக்கை



(கொழும்பு)

**பிரித்தானியாவில் அடையாளம் காணப்பட்டுள்ள புதிய வகை கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவுவதற்கான அபாயம் உள்ளதாக நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

எனவே இது குறித்து தீவிர அவதானத்துடன் இருக்க வேண்டும் என அரச வைத்திய ஆய்வக தொழில்நுட்ப நிபுணர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், மிகவும் வேகமாகப் பரவிவரும் இந்த வைரஸின் புதிய உருமாற்றம் விசேடமானது என சிரேஷ்ட வைத்திய ஆய்வக தொழில்நுட்ப நிபுணர் கீர்த்தி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பிரித்தானியா போன்ற நாட்டிலிருந்து நபர் கள் வருகைதரும்போதும் அவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் போதும் அந்த வைரஸ் பரவக்கூடிய அபாயம் உள்ளதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது இந்த வைரஸ் பரவல் காரணமாக ஐரோப்பிய நாடுகளும் இந்தியா, தென்னாபிரிக்கா, துருக்கி, இஸ்ரேல் போன்ற நாடுகளும் பிரித்தானியாவுக்கான விமானப் பயணங்களை இரத்து செய்துள்ளன.

இதனிடையே கொரோனா வைரஸின் இந்த புதிய உருமாற்றம் அவுஸ்திரேலியா, டென்மார்க் முதலான நாடுகளிலும் அவதானிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

## ஒரு நாளில் 11 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள்

(கொழும்பு)

கொரோனா தொற்று நோயாளிகளை அடையாளம் காண இலங்கையில் நேற்று மட்டும் ஒருநாளில் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, 11 ஆயிரத்து 672 பி.சீ.ஆர்.சோதனைகள் நடத்தப்பட்டதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இம்மாதம் 11 ஆம் திகதியே அதிக எண்ணிக்கையிலான அதாவது 17 ஆயிரத்து 425 பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (நி-4)

# இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கிறது

## கஜேந்திரகுமார் சீற்றம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஊடாக இலங்கை அரசாங்கத்துக்கு மேலும் கால அவகாசத்தை வழங்குவதற்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிப்பதாக, அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவை விடயத்தில் இலங்கையில் தமிழ்க் கட்சிகளுக்கு இடையில் பொது இணக்கப்பாடு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற யோசனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் முன்வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக எம்.ஏ.சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்கள் அவர்களால் நிராகரிக்கப்பட்டன.

அத்துடன் எம்.ஏ.சுமந்திரன் காலநீடிப்பு வழங்க முயற்சிப்பதாகவும் அவர்களால் குற்றம் சுமத்தப்பட்டிருந்த நிலையில், அந்தக் குற்றச்சாட்டை சுமந்திரன் நிராகரித்திருந்தார்.



இந்தநிலையில் ஊடக சந்திப்பில் உரையாற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இந்த விடயத்தை நாசூக்காக கையாள முயற்சிப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஊடாக இலங்கை அரசிற்கு மேலும் கால அவகாசத்தை வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# பசுவைக் கொல்லும் பாதகர்கள்; நடவடிக்கை எடுக்காத பொலிஸார்

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்தில் மக்கள் வாழ்வாதாரத்திற்கு வளர்க்கும் மாடுகளை களவாடி இறைச்சிக்காக வெட்டும் கும்பல்கள் தொடர்பில் பொலிஸார் அசண்டையீனமாக இருப்பதாக குற்றஞ்சாட்டி மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த 9 ஆம் திகதி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பசுவின் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரத்தில் பசு கன்று ஈனவிருந்த நிலையில் களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பசு உரிமையாளர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவித்தே பசுவின் உரிமையாளர் நேற்று முன்தினம் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். (5-4-33)

# தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு வேண்டுமென புலம்பும் தமிழ் அரசியல்வாதிகள்

## வீரசேகர மீண்டும் குதர்க்கம்

(கொழும்பு)

தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்திலும், வெளியிலும் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வேண்டும் எனப் புலம்பித் திரிகின்றனர். இந்தப் புலம்பலை அவர்கள் உடன் நிறுத்த வேண்டும். இவ்வாறு வலியுறுத்தினார் அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர.

"அதிகாரங்கள் பொதுவானவை. அவை அனைத்தும் மத்திய அரசின் கீழேயே இருக்க வேண்டும். அவற்றை ஒவ்வொரு மாகாணங்களுக்கென அல்லது தமிழ் மக்களுக்கென அல்லது முஸ்லிம் மக்களுக்கென பிரித்து வழங்க முடியாது" எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"மாகாண சபை முறைமை தேவையற்றது எனக் கூறிவரும் அமைச்சர் சரத் வீரசேகர, அதனூடாகத் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான அதிகாரப் பகிர்வையும் கொடுத்துவிடக்கூடாது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார். இதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது" எனத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன், யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

அதற்கு பதிலளிக்கும் போதே சரத் வீரசேகர இவ்வாறு தெரிவித்தார். மாகாண சபை முறைமையை இரத்துச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் அன்றிலிருந்து இன்றுவரை உறுதியாக இருக்கின்றேன். அதாவது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் ஊடாக மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்ட போது அதை நான் கடுமையாக எதிர்த்தேன். அன்றிலிருந்து இன்று வரை அதற்கு எதிராகவே கருத்து வெளியிட்டு வருகின்றேன். இதை உணராமல் தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்திலும், வெளியிலும் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வேண்டும் எனப் புலம்பித் திரிகின்றனர். இந்தப் புலம்பலை அவர்கள் உடன் நிறுத்த வேண்டும் என்றார். (நி-4)




இன்றைய தினத்தில் (23.12.2020)

48 ஆவது அகவையில் தடம் பதிக்கும்

Happy Birthday

திரு. தேவராசா வைகுந்தன்

தென்னை பயிர்ச்செய்கை சபையின் வட பிராந்திய முகாமையாளர் திரு. தேவராசா வைகுந்தன் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் கடந்த 5 வருடங்களில் வடமாகாணத்தில் தென்னை அபிவிருத்தி சம்பந்தமான வேலைத்திட்டங்களை மட்டுமன்றி சமூக அபிவிருத்தி திட்டங்களையும் முன்னெடுத்து வந்தார் என்பதனையும் அகமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

Congrats!

தென்னை கற்பகதரு சங்கங்களின் சமாசம் யாழ்.மாவட்டம்.

(C-982)

# வீடு கையளிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச பிரிவிற்குட்பட்ட உமையாள்புரம் இராசயனபுரம் பகுதியில் கிராமத்திற்கு ஒரு வீட்டுத் திட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்ட வீடு கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை,கட்டப் பொருள் தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்தவினால் பயனாளியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த அமைச்சர் கிராமத்திற்கு ஒரு வீடு என்ற திட்டத்தின் கீழ் சுமார் ஆறு இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டினை அதன் பயனாளியிடம் கையளித்தார். நிகழ்வில் அமைச்சின் அதிகாரிகள், பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (5-4-315-316)


## கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து) - மூளாய்

### பதவி வெற்றிடங்கள்

தாதிய உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்.
- ஏனைய வைத்தியசாலையில் கடமையாற்றிய அனுபவம் உள்ளவர்கள்.
- தாதிய உதவியாளர்கள் / பயிற்சியாளர்கள்.

தாதிய சேவைக்கு வெற்றிடங்கள் காணப்படுவதால் உடனடி வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

தலைவர்,
கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்,
மூளாய். (C-994)


# மோட்டார் செல் மீட்பு



(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை அரசமுறிப்பு பகுதியில் வயல் காணியிலிருந்து மோட்டார் செல் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

ஓமந்தை அரச முறிப்பு பகுதியிலுள்ள வயல் காணியில் வெடி பொருள் இருப்பது தொடர்பாக இலங்கை புலனாய்வு பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்த ஓமந்தை பொலிஸார் மற்றும் புலனாய்வு பிரிவினர் குறித்த பகுதியைச் சோதனையிட்ட நிலையில் மோட்டார் செல் ஒன்றினை மீட்டுள்ளனர். நீதிமன்றின் அனுமதியுடன் குறித்த மோட்டார் செல் செயலிழக்க செய்யப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# மரண அறிவித்தல்

## கந்தையா அரசரத்தினம்

( முன்னாள் செயலாளர் – கரவெட்டி பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கம், வடமராட்சி பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கம் )



மலர்வு 10.01.1945 உதிர்வு 22.12.2020

அல்வாய், கவிஞர் செல்லையா வீதி, குமரபதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா அரசரத்தினம் நேற்று (22.12.2020) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பாறுபதம் தம்பதிகளின் மூத்த மருமகனும் மற்றும் வசந்த குமாரியின் அன்புக் கணவரும் ரேவதி, ஜெயவதி, ஜெயரூபன், கலையரசி (சுவிஸ்), சைலஜா, வினோத் (சுவிஸ்), துவாகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சுகாதார அமைச்சு, கொழும்பு), பத்மரூபன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவராசா, வரதவேல் (ஓய்வுநிலை சிரேஷ்ட பதவிநிலை முகாமைத்துவ உதவியாளர்- யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடம்), சுஜாதா, ஸ்ரீபாஸ்கரன் (சுவிஸ்), தயாளதாசன் (ஆசிரியர்- புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ), காயத்திரி (சுவிஸ்), சுஜீபா ( அபிவிருத்தி உத்தியோகத்தர் - விவசாயத் திணைக்களம்,முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுசனா, மதுசன் (விளையாட்டு பயிற்றுவிப்பாளர் - கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயம்), மதுசிகா, மிதூரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்- பிரதேச செயலகம், பருத்தித்துறை), அபிநயா (ஆசிரியர் - மு/வள்ளிபுனம் மகா வித்தியாலயம்), மிதூர்ஷனா , முரசொலி மாறன், மிதுஷன் (நெல் சந்தைப்படுத்தும் சபை - கிளிநொச்சி), மிதூர்ஷா, மிதுசயன், சகானா, சஜீனா, சாருஜன், றக்ஷயா (சுவிஸ்), தூயரசன் (சுவிஸ்), தன்சிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் கியாராவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.12.2020) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-995)

அல்வாய் 077 358 5856 077 846 2917 தகவல்:- குடும்பத்தினர்

## வலம்புரி 21 ஆம் ஆண்டு நிறைவு வாழ்த்துச் செய்திகள்



வலம்புரி
21 ஆவது அகவையில்
பிரகாசிக்கட்டும்

கல்வியின் பயன், சிவஞான
தெளிவு பெறல்
செல்வத்தின் பயன்,
சிவப்பணிகளில் ஈடுபடல்,
வாழ்வின் பயன், தான்பெற்ற
இறை-அனுபவ
இன்பத்தையும், கல்வியின் அறநெறி அனுபவத்தையும்
இவ் வையகத்தோர் யாவரும்
பெறுமாறு செய்தல்

க.கு.க.சிவபாலன்,

### சளைக்காமல் வலம் வருவாய்!

ஈழத்தின் தலைசிறந்த நாள் இதழாம்
உண்மைச் செய்திதனை ஊரெல்லாம் பரப்பிடுவான்
உதயமான நாளாம் நல்நாள் என்போமே
இருபத்தொரு ஆண்டு கடந்தும் உன் சேவை தொடருமே

தடைகள் சவால்களையும் சந்தித்தாலும்
சளைக்காமல் வலம் வருவாயே வலம்புரியானே
இருபத்தொரு அகவையில் இளம் சிங்கமாகவே
வீறுநடை போடுகின்றாய் விரும்பிடும் மக்களிடமே


காலைக் கதிரவன் உதயமாகும் முன்னரே
எம் கைகளில் நீ தவழுகின்றாயே
நல்ல அரிய தத்துவக் கதைகளுடனே
ஆசிரிய தலையங்கத்தை உடனே படித்திடுவோமே


குறைகேள் அரங்கென்ன குறை கூறிட முடியுமா
இன்று ஒரு தகவலில் அரிய நல்ல விடயங்களாம்
சிந்தனைத் துளிகள் சிந்திக்க வைக்குதல்லவா
பசுமைப் புரட்சியுடன் நடைபோடுகின்றாயே

பெ.தனா
தெல்லிப்பழை.




கொரோனா பெருந்தொற்றினால் தொழில் மற்றும் வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியின் நீண்டகால வாடிக்கையாளர்களாகவுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு அவர்களின் தொழில் முயற்சிகளை மீள உருவாக்குவதற்கான நன்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள வடபிராந்திய கிளையில் இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)





முகமாலை மற்றும் கிளாலி பகுதிகளில் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பணியினை இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுரத்த கேரத் பார்வையிட்டார்.

நேற்று கிளிநொச்சி மாட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட உட்கட்டுமான கிராம அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கிளாலி மற்றும் முகமாலை பகுதிகளில் முன்னெடுக்கப்படும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையை பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி), அமைச்சின் செயலாளர், 55 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி, கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபடும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-சப்தசங்கரி, யதுபாஸ்கரன்)

# அரசியல் காரணிகளுக்காக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க இடமளிக்க முடியாது

**(கொழும்பு)**

**அரசியல் காரணிகளை அடிப்படையாக கொண்டு பொதுபயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க இடமளிக்க முடியாது. பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க எடுத்தத் தீர்மானத்துக்கான காரணத்தை அரசாங்கம் இதுவரையில் அறிவிக்கவில்லை என மக்கள் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அனுருத்த சோமதுங்க தெரிவித்தார்.**

Public Utilities Commission of sri Lanka

அவர் மேலும் குறிப்பிடுகையில், மின்சார சபையின் முறையற்ற நிர்வாகத்தினால் 300 பில்லியன் ரூபா நட்டம் இதுவரையில் ஏற்பட்டுள்ளது. இதற்கு ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கமும் பொறுப்புக் கூற வேண்டும்.

மின்சார சபையின் பலவீனமான நிர்வாகத் தன்மையை மறைக்க பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க முயற்சிப்பது நியாயமற்ற செயற்பாடாகும்.

மின்சாரத்துறையில் இடம்பெற்ற பல மோசடிகளை பொது பயன்பாட்டு ஆணைக்குழு வெளிக்கொணர்ந்துள்ளது.

முறைகேடுகளுடன் தொடர்புடைய பலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவை நீக்க விரைவில் எடுத்துள்ள தீர்மானத்துக்கு எவ்வித அடிப்படை காரணிகளும் கிடையாது.

உரிய காரணத்தையும் அரசாங்கம் இதுவரையில் அறிவிக்கவில்லை. பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்கினால் மின்சாரத்துறையில் பல மோசடிகள் இடம்பெறும். இதனால் பொதுமக்களே பாதிக்கப்படுவார்கள்.

பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவை நீக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# ஷானி அபேசேகர கொழும்பு வைத்தியசாலையில்



(கொழும்பு)

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, கொழும்பு தேசிய வைத்திய சாலையின் இருதய சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி ஐ.டி.எச்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (நி-4)

# தம்மிக்கவின் ஆயுர்வேத பானம் உணவு நிரப்பியாக வழங்க அனுமதி

(கேகாலை)

கேகாலை தம்மிக்க பண்டாரவினால் தயாரிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மருந்து தேசிய ஔடதத்திற்கு ஆயுர்வேத திணைக்களத்தின் சூத்திர குழு அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் ரமேஷ் பத்திரன இதனை தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "இந்த ஔடதம் ஏற்கனவே தேசிய மருத்துவத்தால் விஞ்ஞான ரீதியாக உணவு நிரப்பியாக வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, சுய விருப்பத்தின் பேரில் குறித்த ஔடதத்தை பெற்றுக்கொள்வதை தடுக்க முடியாது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ஜனவரி வரையிலாவது மேல் மாகாணத்தை முடக்குங்கள்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, மேல் மாகாணத்தை முடக்குமாறு பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் கொரோனா தொற்றின் மையமாக கொழும்பு மாறிவிட்டது என்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே பண்டிகை காலங்களில் கொரோனா தொற்று மேலும் பரவாமல் தடுக்க குறைந்தபட்சம் ஜனவரி 1 ஆம் திகதி வரை மேல் மாகாணத்தை முடக்க வேண்டும் என்றும் அச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிறிஸ்மஸ் மற்றும் ஆண்டு இறுதி விடுமுறை நாட்களில் மேல் மாகாணத்திலிருந்து பயணங்களை மேற்கொள்வதால் கொரோனா தொற்று மற்ற மாகாணங்களுக்கும் பரவக் கூடும் என்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இருப்பினும் எதிர்வரும் நாட்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தல் அல்லது பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்த எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என இராணுவ தளபதி நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளார். (நி-4)




குறைவான வட்டிக்கு அதிக தொகையினையும் பெற்று,

நிம்மதியாய் இருந்திட தங்கமே

24 கரட் பவுணிற்கு ரூ. 65,000

22 கரட் பவுணிற்கு ரூ. 58,000

குறைவான மாதாந்த வட்டி 0.83%

0112 462 462

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி | அடகு சேவை

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Hatton National Bank PLC - PQ 82

(c-1149)

# பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே குறித்த மோட்டார் சைக்கிள்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் எதிர்வரும் 02 மாதங்களுக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# 60 வருடங்களின் பின் வீதி புனரமைப்பு



(சாவகச்சேரி)

அறுபது வருட காலம் எந்தவிதமான புனரமைப்பும் இன்றிக் காணப்பட்ட சாவகச்சேரி மகளிர் கல்லூரி முதலாம் குறுக்கு வீதி புனரமைப்புக்காக் கடந்த சனிக்கிழமை அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ப.நந்தகோபால், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதனிடம் விடுத்த கோரிக்கையின் பயனாக "நிறைவான கிராமம் " திட்டத்தில் 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் குறித்த வீதி புனரமைக்கப்படவுள்ளது.

வீதிக்கான அடிக்கல்லை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் இணைப்பாளர் எஸ்.உதயசீலன் நாட்டி வைத்தார். (5-30)

# கட்டுப்பாட்டை மீறி வியாபாரம் எச்சரிக்கும் சுகாதாரப் பிரிவினர்

(கரணவாய்)

பருத்தித்துறை நகரப் பகுதியில் கொரோனா கட்டுப்பாடுகளை மீறி மீன் வியாபாரத்தில் ஈடுபட்ட மீன்வியாபாரிகளை பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அவ்விடத்தை விட்டு அகற்றினர்.

யாழ்ப்பாணத்தில் கொரோனாப் பரவல் சந்தைகளூடாக ஊடுருவியுள்ள நிலையில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைய வடமாகாணத்தில் அனைத்து பொதுச்சந்தைகளும் மூடப்பட்டுள்ளன.

வியாபாரிகளை சமூக இடைவெளியுடன் கொரோனாக் கட்டுப்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி சந்தை மற்றும் அதன் வீதியோரம் தவிர்ந்த பகுதிகளில் மரக்கறி மற்றும் மீன் வியாபாரம் செய்ய பருத்தித்துறை நகரசபை அறிவுறுத்தியது. தொடர்ந்தும் அறிவுறுத்தி வருகிறது.

இந்நிலையில் சுகாதார அறிவுறுத்தல்களை புறந்தள்ளி நேற்று முன்தினம் சந்தை அருகேயுள்ள சந்தை வீதியில் மீன் மற்றும் மரக்கறி வியாபாரிகள் ஒன்று கூடியதால் சன நெரிசல் ஏற்பட்டது.

இதனையடுத்து பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் க.சுதாகரன் மற்றும் ஆ.ஜென்சன் றொனால்ட் ஆகியோர் பருத்தித்துறை நகரசபை ஊழியர்கள் சகிதம் சென்று விதிமுறைகளை மீறி செயற்பட்ட அனைத்து வியாபாரிகளையும் எச்சரித்து வெளியேற்றினர்.

அத்துடன் அவ் வீதிகளையும் வியாபார நடவடிக்கைகளுக்காக நகரசபை ஊழியர்களின் உதவியோடு தடை செய்தனர். (5-4-60)

# ஆடம்பரங்களைத் தவிர்த்து சுகாதார நடைமுறை பேணி

## யேசு பிறப்பை கொண்டாடுவோம்

## யாழ்.குருமுதல்வர்



(நல்லூர்)

ஆடம்பரங்களை தவிர்த்து சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நத்தார் விழாவினை கொண்டாடுவோம் என யாழ்மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வருட நத்தார் தினம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வருட கிறிஸ்துவின் பிறப்பு விழாவை இந்த உலகத்திலே சூழ்ந்திருக்கின்ற இந்த பயங்கர தொற்று வியாதியின் மத்தியிலே மக்கள் அழைக்கப்படுகின்றனர்

முதலில் இப்படியான அழைப்புக்காக நாங்கள் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

இப்படியான ஒரு கட்டத்தில் எவ்வாறு நாம் கிறிஸ்துவினுடைய பிறப்பு விழாவை கொண்டாட வேண்டும் என இறைவன் எங்களுக்கு அறிவுறுத்தியிருக்கின்றார்.

இப்படியான காலத்தில் தான் ஆண்டவருடைய பிரசன்னம் அவருடைய வல்லமையை எல்லா மக்களும் அறிந்துகொள்ளும் விதமாக நாங்கள் எங்களுடைய திருநாட்களை கொண்டாட வேண்டும்

உதாரணமாக வழமையாக எத்தனையோ ஆடம்பரங்களுடனும் எத்தனையோ விதமான களியாட்டத்துடனும் நத்தார் விழாவை கொண்டாடுவது வழக்கம். ஆனால் இவ் வருடம் அப்படியான ஆடம்பரங்களோடு செய்ய முடியாவிட்டாலும் அவற்றிலே நாங்கள் பயன்படுத்துகின்ற பல்வேறு விதமான தேவையில்லாத செலவுகளை, ஆடம்பரங்களை எல்லாவற்றையும் தவிர்த்து அவற்றை இந்த வருடத்தில் நாங்கள் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தி கொண்டாடுமாறு இறை வன் எங்களுக்கு அழைப்பு விடுக்கின்றார்.

குறிப்பாக இந்த காலத்தில் பல்வேறு தேவைகளோடு வாழ்கின்ற மக்கள் ஏழை எளியவர்களுக்கு நாங்கள் இரக்கம் காட்டி பல்வேறு வழிகளில் எங்களுடைய பணங்களை விரயம் செய்யாது பயனுள்ள விதத்தில் மக்கள் வாழ்வு பெறும் பொருட்டு அவற்றை நாங்கள் பயன்படுத்தி இல்லாதவர்களோடு பகிர்ந்து கொண்டு வாழ்வதற்கு இந்த வருட கிறிஸ்மஸ் விழா எங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

அதுமட்டுமல்லாது நம்பிக்கை இழந்து வாழுகின்ற மக்களுக்கு நாங்கள் நம்பிக்கையினை கொடுக்கின்ற விழாவாக இந்த கிறிஸ்மஸ் விழாவினை கொண்டாட வேண்டும். எல்லோருடைய வாழ்க்கையிலும் ஆண்டவர் பிரசன்னமாகி இருந்து அவர்களை வழி நடத்துகின்றார் என்ற உண்மையை எங்களுடைய வாழ்விலே நாங்கள் சொல்லி எல்லோருடைய வாழ்விலும் இருக்கின்ற தீமைகளை ஆண்டவர் நிச்சயமாக அகற்றுவார் என்ற நம்பிக்கை ஒளியை எல்லோருக்கும் கொடுக்கின்ற விதத்தில் நாங்கள் நடந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (5-4-33)

# இருவேறு குற்றச்சாட்டில் இருவர் கைது



(சாவகச்சேரி)

தென்மராட்சி-நாவற்குழி முந்நூறு வீட்டுத்திட்டப் பகுதியில் வீட்டில் வைத்து கஞ்சா செடி வளர்த்த ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நாவற்குழிப் பகுதியில் நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீடொன்றில் சாடியினுள் வைத்து வளர்க்கப்பட்ட கஞ்சா செடி கண்டுபிடிக்கப்பட்டது.

கஞ்சா செடியினை வளர்த்தவர் என்ற குற்றச்சாட்டின் பெயரில் வீட்டு உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் இதே சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது நாவற்குழிப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் இருந்து ஒரு தொகை காலாவதியான மருந்துப் பொருட்களுடன் மேலும் ஒரு நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

# பி.சி.ஆர். பரிசோதனை

(குப்பிழான்)

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட இணுவில் பொற்பதி அறிவாலயத்தில் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் வலி.தெற்கு பிரதேச சபையைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து குறித்த பி.சி.ஆர்.பரிசோதனைக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது இணுவில் பகுதியைச்சேர்ந்த ஆட்டோச் சாரதிகள், வர்த்தகர்கள், மருதனார்மடம் ஆட்டோச் சாரதிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என 81 பேரிடம் பி.சி.ஆர்.பரிசோதனை மாதிரிகள் பெறப்பட்டன. (5-18)

# மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கண்காணிக்க ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட உபகரணங்கள்

(கொழும்பு)

மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகள் தொடர்பில் கண்காணிப்பதற்காக 494 பொலிஸ் நிலையங்களுக்கு 1,30,000 உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வாகன விபத்துகள் அதிகமாக இடம்பெறும் காலப்பகுதிகளாக இந்த காலப்பகுதி அடையாளம் காணப்பட்டுள்ளதால், அதனை தடுக்கும் வகையில் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதன்போது மது போதையிலும், அதிக வேகமாகவும் கவனக்குறைவாகவும் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போதையில் வாகனம் செலுத்தி கைது செய்யப்படும் சாரதிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதுடன், அவர்கள் செலுத்திய வாகனங்களும் வழக்கு பொருளாக பதிவு செய்யப்படும்.

இந்நிலையில் குற்றம் நிரூபிக்கப்படும் ஒவ்வொரு சாரதிகளையும் சிறையில் வைக்கவோ, அபராதம் விதிக்கவோ அனுமதியுள்ளதுடன், அவர்களது சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யவோ அல்லது தற்காலிக தடை உத்தரவோ விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (நி-4)

# சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத 1675 பேர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக கடந்த 24 மணிநேரத்தில் 23 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் 1,675 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பயணிகள் போக்குவரத்து பஸ்கள் மற்றும் புகையிரதங்களில் பொலிஸார், சிவில் உடைகளில் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

வீதி விபத்துக்களை குறைக்கவும், கொவிட் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகவும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பொது மக்கள் உரிய முறையில் பின்பற்றுகின்றார்களா? என்பதை கண்டறிவதற்காக சிவில் உடைகளில் பொலிஸார் கடமையில் ஈடுபடவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)

## உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கால எல்லை 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# உலர்ந்த தேங்காய் துண்டுகள் இறக்குமதி செய்ய அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

மாதந்தோறும் 13,000 மெற்றிக் தொன் உலர்ந்த தேங்காய்த் துண்டுகளை மூன்று மாத காலத்திற்கு இறக்குமதி செய்ய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரன மற்றும் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

வாராந்திர அமைச்சரவை ஊடக மாநாட்டின்போது பேசிய அமைச்சர் பத்திரன, உள்ளூர் தேவையை பூர்த்தி செய்வதற்கும், தேங்காய்களுக்கு நிலையான விலையை உறுதி செய்வதற்கும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

அத்துடன் உற்பத்தியில் பற்றாக்குறை காரணமாக சமீபத்திய மாதங்களில் தேங்காயின் விலை படிப்படியாக அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

தேங்காய் எண்ணெய் உற்பத்தித்துறையில் ஈடுபட்டுள்ள வர்களுக்காக, மூன்று மாதங்களுக்கு உலர்ந்த தேங்காய் துண்டுகளை இறக்குமதிசெய்ய அனுமதிக்கப்படும் என்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் கூறினார்.

இதேவேளை உலர்ந்த தேங்காய் துண்டுகளை இறக்குமதி செய்ய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (நி-4)

# முஸ்லிம்களுக்கு நியாயமான தீர்வு வேண்டும்-கருஜயசூரிய

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களைக் கட்டாயமாகத் தகனம் செய்வதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் தீர்மானம் எவ்வித விஞ்ஞான அடிப்படைகளையும் கொண்டிராத அதேவேளை, அதனால் எவ்வித பயனுமில்லை.

எனவே இவ்விடயத்தில் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு நியாயமானதும் விரைவானதுமான தீர்வொன்று பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்று



முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார். (நி-4)


## பூநகரி பலநோக்கு கூட்டுறவு சங்கப் பணியாளர் பிணை வைப்பு மீளறிவித்தல் தொடர்பானது

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் போர்ச்சூழலுக்கு முன் பணியாற்றி ஓய்வு பெற்ற அல்லது சேவையில் இருந்து விலகிய சேவையில் உள்ள பணியாளர்களால் வைப்புச் செய்யப்பட்ட ரொக்கப் பிணைப் பணத்தை மீள வழங்க அல்லது உறுதிப்படுத்த சங்கத்தின் ஆவணங்கள் யாவும் போர்ச்சூழலில் அழிவடைந்த நிலையில் உறுதிப்படுத்த முடியாது இருப்பதால் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்டுள்ள உங்களிடம் உள்ள ஆவணங்களின் நிழற் பிரதியுடனும் அல்லது உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடனும் தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம், தபால் முகவரி உட்பட்ட விண்ணப்பம் ஒன்றைத் தயாரித்து 10.02.2021இற்கு முன் தலைவர், பூநகரி பலநோக்குக் கூட்டுறவு சங்கம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். குறித்த தினத்திற்கு பின் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(C-989)

தா. அரியரத்தினம், தலைவர்,
பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பூநகரி.



## மு/வேணாவில் சிறிமுருகானந்தா வித்தியாலயம்
## தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு-2020



செல்வன் ரமேஸ் தர்சன் 182 புள்ளிகள்
செல்வி தங்கேஸ்வரன் புகழினி - 169 புள்ளிகள்
அதிபர்-பாலகிருஷ்ணன் செல்வக்குமார்
வகுப்பாசிரியர்- திருமதி மல்லிகா செல்வக்குமார்
பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் வழிகாட்டிய அதிபர்,ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

Best Wishes

160 புள்ளிகளுக்கு மேல் -2 மணவர்களும், 100-160 வரை புள்ளிகள் -13 மணவர்களும், 70 -100 வரை புள்ளிகள் 3 மணவர்களும் பெற்றுள்ளனர்.

வாழ்த்துவோர்:- அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினர்
மு/வேணாவில் சிறிமுருகானந்தா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு.



## பிறந்த தின வாழ்த்துக்கள்



### திரு. தேவராசா வைகுந்தன்

48 வது அகவையில் காலடி எடுத்து வைக்கும் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் உயர் திரு. தேவராசா வைகுந்தன் அவர்களை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.
அவர் எமது கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னை அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் 5 வருட காலமாக தனது பணியை ஆற்றி வருகிறார்.
அவர் பணி தொடர வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

தென்னை கற்பகதரு சங்கங்களின் சமாசம்,
கிளிநொச்சி மாவட்டம்.

## இரணைமடுக்குள பகுதி மக்களுக்கு வெள்ள அபாய முன்னெச்சரிக்கை

(முறிகண்டி)

இரணைமடு குளத்தின் நீரேந்து பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ள நிலையில் இரணைமடு குளத்தின் வடிநில பகுதிகளில் உள்ள மக்களுக்கு வெள்ள அபாயம் எச்சரிக்கையினை கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு விடுத்துள்ளது.

தற்போது இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 33 அடி 6 அங்குலமாக அதிகரித்துள்ளது. வளிமண்டலவியல் திணைக்களம் மாவட்டத்தின் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட மழைவீழ்ச்சி கிடைக்கலாம் எனக் கூறி உள்ளது. எனவே நீர்ப்பாசன திணைக்களம் வெள்ள முன் எச்சரிக்கையை இரணைமடு குளத்தின் கீழ் பகுதிகளுக்கு விடுத்துள்ளது.

இதன் பிரகாரம் முரசுமோட்டை, பன்னங்கண்டி, மருதநகர், ஊரியான், கண்டாவளை மற்றும் கனகராயன் ஆற்றின் ஓரப் பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சில வேளைகளில் மழை வீழ்ச்சியின் தன்மையை பொறுத்து இன்று மாலை அல்லது நாளை இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் திறப்பதற்கான சாத்தியப்பாடு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-100)

## நத்தார் நள்ளிரவு திருப்பலிகள் அனைத்தும் நிறுத்தம்

(நெளுக்குளம்)


இவ்வருட நத்தார் நள்ளிரவுத்திருப்பலிகள் அனைத்தும் கொரோனா நோய் தொற்று சூழ்நிலையை கருத்தில் கொண்டு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மன்னார் மறைமாவட்ட ஆயரினால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது என பங்குச்சபைகளுக்கும் கடந்த ஞாயிறு திருப்பலியின் பின்னர் வவுனியா ஆலய மக்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 நோய் தொற்றுக் காரணமாக இவ்வருடத்தில் களியாட்ட நிகழ்வுகள், கரோல், ஒளிவிழா என்பனவும் நத்தார் நள்ளிரவுத் திருப்பலிகள் என்பன ஆயரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் நத்தார் தினத்தன்று காலை 7.30 மணிக்கு திருப்பலி சமூக இடைவெளிகளையும் சுகாதார முறைகளையும் பின்பற்றி ஆலயங்களில் இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-299)



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாத்தளன் றோமன் கத்தோலிக்க பாடசாலை மற்றும் அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் நவீன வசதிகளைக் கொண்ட கற்றல் வள நிலைய வகுப்பறைகளைக் கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், ஆங்கில மொழி உதவிப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், மாவட்ட செயலக மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்கள மாவட்ட இணைப்பாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படம்:- தவசீலன்)



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பச்சிலை பள்ளியிலுள்ள தேவையுடைய மாணவர்களிற்கு கற்றல் உபகரணங்களை தவிசாளர் சு. சுரேன் வழங்கி வைத்தார்.

## சட்டவிரோத செயல்களுக்கு உதவி புரியும் அதிகாரிகள் விபரம் வெளியிடப்படும்

### திலீபன் எம்.பி.தெரிவிப்பு

**(நெளுக்குளம்)**

**வவுனியாவில் காடுகளை அழித்து சட்டவிரோதமான முறையில் கிரவல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதுடன், அதற்கு உடந்தையாக செயற்படும் ஒருசில அதிகாரிகளின் விபரங்களும் வெளிப்படுத்தப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்பு குழு தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் சட்டவிரோதமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வரும் கிரவல் அகழ்வுப்பணி தொடர்பாக நேற்று முன்தினம் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

வவுனியாவில் கிரவல் அகழ்வு என்ற போர்வையில் ஏக்கர் கணக்கான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஓமந்தை மாணிக்கர் வளவுப்பகுதியில் 10 ஏக்கருக்கு மாத்திரம் கிரவல் அகழ்விற்கான அனுமதி வழங்கப்பட்ட நிலையில் சுமார் 48 ஏக்கர் அளவில் கிரவல் அகழ்வுப்பணி இடம்பெற்றுள்ளது. நாம்பன் குளம் பகுதியிலும் இதே நிலைமை தான். அங்கிருந்த பெறுமதியான மரங்களிற்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. அதற்கான எந்தவிதமான ஆவணங்களும் திணைக்களங்களிடம்



இல்லை.

குறித்த பகுதியை பார்வையிட்ட போது கிரவலை நிரப்பி வைத்திருந்த டிப்பர் வாகனம் அதனை கொட்டிவிட்டு சென்றது. அனுமதிப்பத்திரம் இருந்தால் ஏன் அதனை கொட்ட வேண்டும். வன வளத்திணைக்களம் பொது மக்களின் அன்றாட விடயங்களில் மாத்திரம் தலையிடுவதை நிறுத்தி இப்படியான பிரச்சினைகளையும் கவனிக்க வேண்டும். கிரவல் அகழ்வுடன் தொடர்புடைய சில அதிகாரிகளின் தகவல்கள் கூட பொதுமக்களால் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட மட்டங்களில் தீர்க்க முடியாத இவ்வாறான பிரச்சினைகளை எனது கவனத்திற்கு கொண்டு வருமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். எனவே இவ்வாறான விடயங்கள் தொடர்பாக இனி உயர் மட்ட ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இனிவரும் காலங்களில் கிரவல் அகழ்விற்கான அனுமதி வழங்கும் போது அரச அதிபர் மற்றும் ஏனைய திணைக்கள மட்டங்களில் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பின்னர் அதனை என்னுடைய கவனத்திற்குக்கொண்டு வருமாறு தெரிவித்துள்ளேன். ஏனெனில் மக்கள் முறையிடுவது மக்களின் பிரதிநிதிகளான எம்மிடம் தான். இந்த விடயத்தில் பொலிஸாரும் கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும்தெரிவித்தார். (5-4-299)

## நிவாரணம் வழங்கப்படாத நிலையில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள்

(நெளுக்குளம்)

வவுனியாவில் கொரோனா தனிமைப்படுத்தலுக்குட்பட்ட குடும்பங்களிற்கு நிவாரணங்களும் வழங்கப்படாமையினால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களிற்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த வாரம் வவுனியா திருநாவற்குளத்தை சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து,

குறித்த குடும்பத்துடன் தொடர்புகளைப் பேணிய பலர் திருநாவற்குளம் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு 6 நாட்கள் கடந்த நிலையிலும் அவர்களுக்கு எந்தவிதமான நிவாரண உதவிகளும் கிடைக்கப்பெறவில்லை.

இதேபோல கற்குழியில் கொரோனாத் தொற்றிற்குள்ளானவருடன் தொடர்புகளைப் பேணியதாக பூந் தோட்டம் ஸ்ரீநகர் கிராமத்திலும் சில குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள் என. அவர்களுக்கும் இது வரை நிவாரணங்கள் வழங்கப்படவில்லை.

கூலித்தொழிலை நம்பி இருக்கும் குறித்த குடும்பங்கள் தனிமைப்படுத்தல் காரணமாக வெகுவாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான உதவிகளை வழங்கினால் அவர்கள் பட்டினியிலிருந்து மீள்வார்கள். (5-4-299)

## கிளிநொச்சி சேவைச் சந்தை கட்டுப்பாடுகளுடன் இயங்க அனுமதி

(முறிகண்டி)

கிளிநொச்சி சேவைச் சந்தையை இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் இன்று திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சேவைச் சந்தையின் மரக்கறி தவிர்ந்த ஏனைய வர்த்தக செயற்பாடுகளையும் இன்று முதல் முழுமையாக முன்னெடுக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பான்சி மற்றும் புடைவை வாணிபங்களை நேற்றுப் பிற்பகல் திறக்கவும் சுகாதார துறையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய வர்த்த நிலையங்கள் இன்று வழமை போன்று திறக்கப்பட்டு வர்த்த செயற்பாடுகளை முன்னெடுக்க சுகாதார துறையினரால் அனுமதி வழங்கப்பட்டது.

பொதுமக்களின் சுகாதார நடைமுறைகள் மற்றும் நெரிசல்கள் அவதானிக்கப்பட்டு அடுத்து வரும் நாட்களில் சேவை சந்தையின் மரக்கறி விற்பனைப் பகுதியும் திறந்து வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய சூழல் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி சேவை சந்தை வளாகம் ஏனைய பிரதேசங்களில் உள்ள பொது சந்தைகளைவிட போதுமான இடவசதிகளை கொண்டுள்ளமையாலும், தனித்தனியான கடைதொகுதிகளை கொண்டுள்ளமையாலும் வர்த்தகர்களின் கோரிக்கைக்கு அமைவாக இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் இந்த விசேட அனுமதி சுகாதார பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார விதிமுறைகளை மீறும் சந்தர்ப்பத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் மீண்டும் மூடுவதற்கும் சுகாதார தரப்பினரும், பிரதேச சபையினர் மற்றும் வர்த்தகர்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-100)

## இராசிபலன்

23.12.2020
மார்கழி 08, புதன்கிழமை,
நவமி முன்னிரவு 11.08 மணிவரை
ரேவதி முழுவதும்
சுபநேரம் 4.55-6.25 மணிவரை
இராகுகாலம் 12.25-01.55 மணிவரை
சந்திராஷ்டமம் உத்தரம்

வளவன்

**மேஷம்**
தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்**
வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், குடும்பத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்**
நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.

**கடகம்**
முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்**
நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை பாதியில் விட்டுவிடுவீர்கள்.

**கன்னி**
தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**துலாம்**
தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், சுவாரஸ்யமான சம்பங்கள் இடம்பெறலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும், பாக்கிகள் வசூலாகும் வாய்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்**
நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே கைகூடும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், பெற்றோர் மீதான பாசம் கூடும், பயணங்கள் கைகூடும்.

**மகரம்**
குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், வழிபாடு சிறப்பினைத் தரும்.

**கும்பம்**
குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள்.

**மீனம்**
பொருளாதார நலன் கருதிய பயணமொன்று இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**உயர்வாகக் கருதினால் உயர்ந்திட முடியும்**

# கொரோனா தடுப்பு மருந்து இலங்கைக்கு வழங்க ரஷ்யா தயார்

**(கொழும்பு) கொரோனாவுக்கான தடுப்பு மருந்தை ரஷ்யாவில் இருந்து இலங்கைக்கு கொண்டுவருவது குறித்து எதிர்வரும் வாரம் தீர்மானிக்கப்படவுள்ளது.**

அதன்படி எதிர்வரும் வாரம் ரஷ்ய தூதுவருடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்தால் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட மருந்துகள் கிடைப்பதற்கு முன்னரே ரஷ்ய மருந்தான ஸ்புட்னிக் வி தடுப்பூசி அரசதுறையினருக்கு கிடைக்கும் என தெரிவித்துள்ளார்.

ரஷ்ய மருந்தினை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன என குறிப்பிட்டுள்ள இராஜாங்க அமைச்சர், ரஷ்ய அரசாங்கம் தனது மருந்தினை இலங்கைக்கு வழங்குவதற்கு தயாராகவுள்ளதால் அரசமருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மூலம் அந்த மருந்தினை கொண்டுவரமுடியும் என தெரிவித்துள்ளார்.

இதனைதவிர தனியார் மருந்து தயாரிப்பு நிறுவனங்களுடன் பல பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன எனவும் அதனடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எந்த மருந்தினை இலங்கைக்கு கொண்டுவரவேண்டும், என்னவிலை என்பது போன்ற விபரங்களை இதுவரை தீர்மானிக்கவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தனியார் துறையினர் ஊடாக மருந்துகளை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தற்போது மாடர்னா மற்றும் பைசர் நிறுவனத்தின் மருந்துகள் மற்றும் சீன மருந்துகள் குறித்து கவனம் செலுத்துவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விலை சேமிப்பதற்கான காலநிலை போன்றவற்றின் அடிப்படையில் எந்த மருந்தினை விரைவில் இலங்கைக்கு கொண்டுவரமுடியும் என தீர்மானிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# பிரித்தானிய விமானங்கள் இலங்கையில் தரையிறங்குவதற்கான அனுமதி மறுப்பு

## அரசாங்கம் முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)

பிரித்தானியாவில் இருந்து வரும் விமானங்கள் இன்று முதல் இலங்கையில் தரையிறங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பிரித்தானியாவில் புதிய கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ள நிலையில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

அதன்படி இன்று முதல் பிரித்தானிய விமானங்கள் இலங்கைக்குள் நுழைய அனுமதிக்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கொரோனா தொற்று குறித்து சர்வதேச நாடுகள் மத்தியில் எச்சரிக்கை அதிகரித்துள்ள நிலையில் 40 இற்கும் மேற்பட்ட நாடுகள் விமான பயணத்தை இரத்துச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இலங்கை வரும் விமானங்களுக்கு தரையிறக்கல், தரித்தல் கட்டணங்கள் இல்லை

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் விமானங்களுக்கான தரையிறங்கல் மற்றும் தரித்தல் கட்டணங்களை அறவிடாதிருக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இலங்கையில் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் விமான நிலையங்கள் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம், மத்தள விமான நிலையம் மற்றும் ரத்மலான விமான நிலையங்களே இவ்வாறு திறக்கப்படவுள்ளன.

இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இடம்பெற்ற **அமைச்சரவைக் கூட்டத்தில்** இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




அதன்படி இம்மாதம் 26 ஆம் திகதி முதல் ஜனவரி 19 ஆம் திகதி வரை இலங்கைக்கு வரும் விமானங்களுக்கான தரையிறங்கல் மற்றும் தரித்தல் கட்டணங்களை அறவிடாதிருக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சுகாதார அமைச்சு முடிவெடுக்கும் வரை சடலங்களை தகனம் செய்ய வேண்டாம்

## காலி நீதிமன்றம் உத்தரவு


(காலி)

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வது குறித்து சுகாதார அமைச்சு முடிவெடுக்கும்வரை சடலங்களை பிரேத அறையிலேயே வைத்திருக்குமாறு காலி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் சடலங்களை வைத்திருப்பதற்கு ஐந்து குளிரூட்டப்பட்ட கொள்கலன்களை வழங்க வேண்டும் எனக் கோரி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நீதியமைச்சருக்கு எழுதிய கடிதத்தினை அவர்கள் நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தனர்.

இதனையடுத்தே சடலங்களை அடக்கம் செய்வது குறித்து சுகாதார அமைச்சு முடிவெடுக்கும்வரை சடலங்களை பிரேத அறையிலேயே வைத்திருக்குமாறு காலி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி-4)

# நாமல் பூங்கா தேசிய மரபுரிமையாக பிரகடனப்படுத்தப்படும்



(கொழும்பு)

ஊதா பளிங்குகளால் பிரசித்தி பெற்ற நாமல் பூங்காவை அடுத்த ஆண்டு தேசிய மரபுரிமையாக பிரகடனப்படுத்தப் போவதாக இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு தேசிய மரபுரிமைகள் குழுவின் அனுமதி கோரவிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

தேசிய நாமல் பூங்காவின் ஸ்தாபகர் ராஹூல தேரரின் அழைப்பை ஏற்று, இராஜாங்க அமைச்சர் பூங்காவிற்கு விஜயம் செய்தார்.

இந்த விஜயத்தில் பூங்காவை தேசிய மரபுரிமையாக பிரகடனப்படுத்துவது குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். (நி-4)


# சுமார் ஒரு மாதத்தின் பின்னர் கொவிட் தொற்று நிலையில் மாற்றம்

(கொழும்பு)

நாட்டில் சுமார் ஒரு மாத காலத்திற்கு பின்னர் பதிவான கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் நேற்று முன்தினம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் நாட்டில் 364 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கடந்த மாதத்தில் மாத்திரம் நாளொன்றுக்கு சுமார் 500 இற்கும் அதிகமான கொவிட் தொற்றாளர்கள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



புனரமைக்கப்பட்ட அநுராதபுரம் ஜேதவன தொல்பொருள் அருட்காட்சியகம் மற்றும் உள்ளக சாலை அமைப்பு என்பன நேற்று முன்தினம் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது.

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பணமும் பிணமும்!

ஒரே ஒரு ஊர்.அந்த ஊருக்குப் பேரு கொடையாளிப்பட்டி.

அந்த பேருக்குத் தகுந்த மாதிரித்தான் அந்த ஊர் மக்களும் யார் வந்து என்ன கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் கொடுப்பார்கள். கொடையாளிகள் நிறைந்த ஊர். இனாமாக மட்டும் இல்லை.. கடனாகவும் பணம் கொடுப்பார்கள்.

யாருக்காவது அவசரமாக பணம் தேவைப்படுகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள்..அந்த ஊருக்குப் போய் வாங்கிக் கொள்ளலாம். பத்திரம் தேவையில்லை..சாட்சி தேவை இல்லை... ஜாமீன் தேவையில்லை..எந்த உத்தரவாதமும் கேட்காமல் பணம் கொடுத்துவிடுவார்கள்.

எங்கள் ஆள் ஒருத்தனுக்குப் பணம் தேவைப்பட்டது.சொந்த பந்தத்திடமெல்லாம் கேட்டுப் பார்த்தான். யாரும் கொடுக்கின்ற வழியாக தெரியவில்லை. எல்லோரும் அவர்கள் அவர்கள் சௌகரியத்தைப் பற்றிக் கவலைப்படாதவர்கள்.

இவன் எல்லோரையும் கேட்டுப் பார்த்துவிட்டு சோர்ந்து போய் உட்கார்ந்துவிட்டான். அந்த நேரம் தான் கொடையாளிப்பட்டியைப் பற்றி கேள்விப்பட்டான்.அப்படி ஒரு ஊர் இருப்பது தெரிந்ததும் அந்த ஊருக்கு ஒருநாள் புறப்பட்டுப் போனான்.

வயல்காட்டு வழியாக போக வேண்டியிருந்தது. மெதுவாக நடந்து ஊர் எல்லைக்கு வந்துவிட்டான்.

இரண்டு பக்கமும் விவசாய வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருக்கின்றது. ஏர் உழுதுகொண்டு இருக்கின்றார்கள்.அப்பொழுது அங்கே ஒரு ஆளை பாம்பு கடித்துவிட்டது. பக்கத்திலே வேலை செய்துகொண்டு இருந்தவர்கள் ஓடி வந்தார்கள். அவசரமாக செய்ய வேண்டிய முதல் உதவியெல்லாம் செய்து பார்த்தார்கள். பலன் இல்லை. அந்த ஆள் செத்துப் போய் விட்டான்.

அவன் செத்துவிட்டான் என்று தெரிந்ததும் அவனைத் தூக்கி வரப்பு மேலே போட்டுவிட்டு..எல்லோரும் அவர்கள் அவர்கள் வேலையை கவனிக்க ஆரம்பித்துவிட்டார் கள்.

அங்கே ஒரு ஆள் இவனைப் பார்த்துச் சொன்னான். ஐயா... நீங்கள் போகின்ற வழியில்..இவன் சொந்தக்காரன் இவனுக்கு சோறு கொண்டு வருவான். இவன் இங்கே இறந்த விட்டான் என்று அவனிடம் சொல்லி விடுங்க. என்றான்.

இவனுக்கு மிகவும் ஆச்சரியம்.

என்னடா இது... பாம்பு கடித்துவிட்டது என்றதும் பதறி அடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள். இறந்துவிட்டான் என்றதும் பேசாமல் தூக்கிப் போட்டுப் போய்விட்டார்கள் என்று நினைத்துக் கொண்டே நடந்து போனான்.

எதிரிலே சோறு கொண்டு ஒரு ஆள் வந்தான்.இவன் விவரத்தை சொன்னான். அங்கே உங்கள் சொந்தக்காரன் பாம்பு கடித்து இறந்து போய்விட்டான் என்றான்.

அவன் கொஞ்ச நேரம் அமைதியாக நின்றான். பின்பு அங்கேயே வரப்பிலே உட்கார்ந்து கொண்டு வந்த சோற்றை தானே சாப்பிட்டு முடித்தான். பேசாமல் எழுந்து திரும்பிப் போய்விட்டான். கொஞ்சம் கூட பதறவில்லை. அழவில்லை.

இப்படியும் ஒரு ஊரா? என்று நினைத்து ஆச்சரியப்பட்டுக் கொண்டே இவன் ஊருக்குள்ளே போனான். ஒரு பெரிய மனிதனைப் பார்த்து பணம் கேட்டான்.

அவரும் இவனுடைய பெயரையும் ஊரையும் மட்டும் விசாரித்துக் கொண்டு தேவையான பணத்தைக் கொடுத்துவிட்டார்.

பணத்தை வாங்கிக் கொண்ட பிறகு தன் மனசை அரித்துக் கொண்டிருந்த அந்த விடயத்தைப் பற்றிக் கேட்டான். ஐயா..வழியிலே ஒருத்தன் இறந்து விட்டான். அவனை அப்படியே தூக்கி வரப்பிலே போட்டுவிட்டு.. எல்லோரும் வயல் வெளி வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்களே என்றான்.

இதற்கு அந்தப் பெரியவர் சொன்னார். ஆமாம்.. அப்படித்தான்.. செய்வோம்..வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பிப் போகும்போது அவனைத் தூக்கிக் கொண்டு வந்து அடக்கம் செய்துவிடுவோம் என்றார்.

மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றதே..என்றார்.

ஏன்..உங்கள் ஊரிலே யாராவது இறந்தால் என்ன செய்வீர்கள்? என்று கேட்டார்.

என்ன இப்படி கேட்கின்றீர்கள்..எங்கள் ஊரிலேயெல்லாம் பிணத்தை தூக்க விடமாட்டார்கள். ஒப்பாரி வைப்பார்கள். கட்டிப் புரண்டு அழுது புலம்பி தீர்த்துவிடுவார்கள் என்றான்.

பெரியவர் பார்த்தார். அவனிடம் கொடுத்த பணத்தை லபக் என்று பறித்து விட்டார். திருப்பி வாங்கிக்கொண்டார். இவன் பதறிப் போய் நின்றான்.அவர் சொன்னார்.

பிணத்தையே விட மாட்டேன் என்று கட்டிப்பிடித்து அழுதால் நான் கொடுத்த பணத்தை மட்டும் எப்படி திருப்பிக் கொடுக்கப் போகின்றாய்? போய்விட்டுவா? என்று விரட்டி விட்டாராம்.

இந்தக் கதை நண்பர் ஒருவர் சொன்னது. கதை வேடிக்கையாகத் தெரிந்தாலும் இதிலே கருத்து உண்டு. பணம்-பிணம் இது இரண்டையுமே விடுவதற்கு அவ் வளவு சுலபமாக மனம் வருவதில்லை.இந்த இரண்டு விடயங்களிலேயும் அறிவார்ந்த செயற்பாடு தேவை. ஒரு பேருந்து மரத்திலே மோதிவிட்டது. எல்லோரும் அடிபட்டு முனகிக் கொண்டு கிடக்கின்றார்கள். டிரைவர் கண்டக்டருக்கும் அடி..அவர்களும் ஒரு பக்கம் இருக்கின்றார்கள்.

ஒரு மூலையில் இருக்கின்ற ஒருத்தன் மெதுவாக முக்கி முனகி கண்டக்டர்..கண்டக்டர்..என்று சத்தம் போட்டான். கண்டக்டரும் மெதுவாக நகர்ந்து அவனிடம் போய் என்ன? என்று விசாரித்தார்.அவன் மிகவும் சிரமப்பட்டு வாயைத் திறந்து பதினைந்து காசு சில்லறை பாக்கி என்றான்.

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2020-15.01.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



சார்வரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான் சூரியன், சந்திரன், புதன் ஆகிய மூன்று கிரகங்களோடும் இணைந்து இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே பொருளாதாரப் பிரச்சினை அகலும். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். தன லாபாதிபதியான குரு விரய ஸ்தானத்தில் இருப்பதால் சுப விரயங்களும் அதிகரிக்கும்.

### ராகு-கேதுக்களின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் ராகுவும், 10 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். மேலும் குருவின் பார்வை ராகு மீது பதிகின்றது. எனவே இல்லத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும் சூழலும், சுபவிரயங்களும் உண்டு. உறவுகளிலிருந்த பிணக்குகள் அகலும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் மீண்டும் கிடைக்கும். திடீரென அறிமுகமான ஒருவரால் பெரியளவில் பயனடைவீர்கள்.

### மகரச் சனியின் சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசிக்கு 11ஆம் இடம் எனப்படும் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான், டிசெம்பர் 26ஆம் திகதி மகர இராசிக்கு 12ஆம் இடத்திற்கு வருகின்றார். இது ஏழரைச் சனியின் தொடக்கமாகும். முதல் இரண்டரை ஆண்டு விரயச்சனியின் ஆதிக்கம் வருகின்றது. இதில் உங்களுக்கு முதல் சுற்றா? அல்லது இரண்டாவது சுற்றா? என்பதை அறிந்து கொள்ளுங்கள். இரண்டாவது சுற்றாக இருந்தால் பொங்கு சனி பலமாக இருந்தால் நற்பலன்கள் உங்களுக்கு

## திட்டமிடாத காரியங்களில் வெற்றி கிடைக்கும்

வந்து கொண்டே இருக்கும். இருந்தாலும் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் கொஞ்சம் விழிப்புணர்ச்சி தேவை. நண்பர்களில் நம்பிக்கைக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுத்து வைத்துக்கொள்வது நல்லது.

### மகர புதனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த புதன் டிசெம்பர் 30 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கின்றார்.




ஏற்கனவே அங்கு உங்கள் இராசிக்கு 12 இற்கு அதிபதியான சனி பகவான் இருக்கின்றார். அவரோடு 6 இற்கு அதிபதி புதன் சேரும்பொழுது 'விபரீத ராஜயோகம்' செயற்படும். எனவே திட்டமிடாத காரியங்களில் கூட உங்களுக்கு வெற்றி கிடைக்கும். திறமை மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து பல காரியங்களை முடித்துக் கொடுப்பர். வாழ்க்கைத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியா கும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றங்கள் கிடைக்கும்.

### தனுசு சுக்கிரனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஜனவரி 5 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கின்றார். எனவே இக்காலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. உடன்பிறப்புகள் மற்றும் உறவினர்களால் விரயம் உண்டு. பெற்றோர்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். செய்யும் முயற்சிகளில் தடைகளும், தாமதங்களும் வந்து கொண்டேயிருக்கும். அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளைக் கேட்டுச் செய்வது நல்லது. வாகனப் பழுதுகளும் அதனால் விரயங்களும் உண்டு.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் பெருமாள், லட்சுமி, அனுமன் ஆகியோரை வழிபடுவது நல்லது.



சார்வரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அவர் நீச்சம் பெற்றாலும் அவரது பார்வை பலன் நன்மைகளை வழங்கும். அதன் அடிப்படையில் 3,5,7 ஆகிய இடங்களை குரு பார்ப்பதால்

## கல்யாண வாய்ப்புக்கள் கைகூடும்

சகோதரர்களால் நன்மை கிடைக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. கல்யாண வாய்ப்புகள் கைகூடும்.

### ராகு-கேதுக்களின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் ராகுவும், 9ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். 'ராகுவைப் போல கொடுப்பவனுமில்லை' என்பது பழமொழி. எனவே வெற்றிகள் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகு பல நல்ல வாய்ப்புகளை உங்களுக்கு வரவழைத்துக் கொடுப்பார். குறிப்பாக இதுவரை செய்த முயற்சிகளில் இருந்த தடை அகலும்.

உடன்பிறப்புகளின் வழியில் ஒரு நல்ல தகவல் வந்து சேரும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். பணிபுரியுமிடத்திலிருந்த பிரச்சினைகள் அகலும். வெளிநாட் டிலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். தொழில் வளர்ச்சிக்குப் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். அசையா சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும்.

### மகரச் சனியின் சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், டிசெம்பர் 26ஆம் திகதி மகர இராசிக்கு வருகின்றார். அது உங்களுக்கு லாப ஸ்தானமாகும். எனவே தொழில் முன்னேற்றமும், அதன் மூலம் எதிர் பார்த்த லாபமும் கிடைக்கும். எதிரிகள் விலகுவர். விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும். உயரதிகாரிகள் உங்கள் பணிக்கு உறுதுணையாக இருப்பர். வாங்கிய கடனைக் கொடுப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். மனக்குழப்பம் அகலும். எதிர் காலத்தைப் பற்றிய பயம் விலகும். உடல் நலம் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.




### மகர புதனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 4,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானாவர் புதன். அவர் டிசெம்பர் 30 ஆம் திகதி லாப ஸ்தானத்திற்கு வருகின்றார். 4இற்கு அதிபதி 11ஆம் இடத்திற்கு வரும் இந்த நேரம் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். புத்திசாதுர்யத்தால் புதிய திருப்பங்களைக் காண்பீர்கள்.

தடுமாற்றங்கள் அகலும். தன வரவு பெருகும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். மாமன், மைத்துனர் வழியில் மனமகிழ்ச்சியான சம்பவங்கள் நடைபெறும். சேமிப்பு உயரும்.

### தனுசு சுக்கிரனின் சஞ்சாரம்

ஜனவரி 5ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 3,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் தனுசிற்கு வரும் இந்த நேரம் சகோதரர்களால் விரயம் ஏற்படலாம்.

பெண்வழிப் பிரச்சினைகள் தலைதூக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். நல்லது எது, கெட்டது எது? என்று ஆராய் ந்து முடிவெடுப்பது நல்லது.


தொழில் வளர்ச்சியில் அக்கறை அதிகம் காட்டுவதன் மூலமே ஆதாயம் கிடைக்கும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குரு வழி பாட்டை மேற்கொள்ளுங்கள்.

(முற்றும்)

# தரமான முகக்கவசங்கள் குறைந்த விலையில்

(கொழும்பு)

**சதொச கிளை மற்றும் இணை நிறுவனங்கள் மூலம் தரமான முகக்கவசங்களை குறைந்த விலையில் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**



அதன்படி மொத்த விற்பனையாளர்கள் 12 ரூபாய்க்கும் நுகர்வோர் 15 ரூபாய்க்கும் முகக்கவசங்களை கொள்வனவு செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள் ளார்.

சதொச நிறுவனத்தின் 15 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு சதொச தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அடுத்த வாரம் தொடக்கம் தொற்று நீக்கிகளையும் குறைந்த விலைக்கு விநியோகிக்கப் போவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

2021ஆம் ஆண்டு தொடக்கம் இளம் தொழில் முயற்சியாளர்கள் ஆயிரம் பேரை இணைத்துக்கொண்டு, மக்கள் குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்யக்கூடிய ஆயிரம் கியூஷொப் விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (நி-4)

# ஆயிரம் ரூபா வழங்குவதற்கு தோட்டக்கம்பனிகளுக்கு ஒருவாரகாலம் காலக்கெடு



(கொழும்பு)

2021 வரவு -செலவு திட்ட முன்மொழிவுக்கமைய தோட்டத்தொழிலாளர்களுக்கான நாளாந்த அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபாவரை அதிகரிப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ள தோட்டக்கம்பனிகளுக்கு ஒருவார காலம் வழங்குவதற்கு தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தீர்மானித்துள்ளார்.

தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பாக தோட்டத் தொழிலாளர்களின் தலைவர்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து, இரண்டு தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்தே அமைச்சர் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

அடிப்படை சம்பளம் ஆயிரம் ரூபா வழங்கமுடியாத கம்பனிகள் இருக்குமாக இருந்தால், அந்தத் தோட்டங்களை மீண்டும் அரசாங்கத்துக்கு வழங்கவேண்டும். அதன் பிரகாரம் இந்த தோட்டங்களை அரசாங்கத்தினால் அல்லது வேறு முகாமைத்துவ நிறுவனம் ஒன்றினூடாக நடத்திச் செல்ல அரசாங்கம் தயார். அதனால் இதுதொடர்பாக தீர்மானம் மேற்கொள்ள இறுதியாக மேலும் ஒரு வார கால அவகாசம் கம்பனி உரிமையாளர்களுக்கு வழங்குகின்றேன் எனத் தெரிவித்தார்.

தொழில் அமைச்சில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலுக்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ், ப.ராமேஷ்வரன், சுஜித் பெரேரா மற்றும் செந்தில் தொண்டமான் ஆகியோரும் தொழிலாளர் சம்மேளனத்தின் பணிப்பாளர் நாயகம் கனிஷ்க வீரசிங்க உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர். (நி-4)

# தொற்றாளர்கள் இல்லாத மாகாணமாக மேல்மாகாணம் விரைவில் மாறும்



(கொழும்பு)

ஒரு கொவிட் தொற்றாளரேனும் இனங்காணப்படாத மாகாணமாக மேல் மாகாணத்தினை மாற்றியமைக்க வேண்டும் என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற, மீண்டும் கிராமத்திற்கான தேசிய வேலைத்திட்டத்தின் மேல் மாகாணத்திற்கான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது, "நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சிக்கான பயணமும் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுவது மேல் மாகாணத்திலேதான்.

ஜனவரி மாதம் தொடக்கம் ஒரு கொவிட் தொற்றாளரேனும் இனங்காணப்படாத மாகாணமாக மேல் மாகாணத்தினை மாற்றியமைக்க வேண்டும். அப்படியிருந்தால் எமக்கு வெற்றிகரமான பாதையில் செல்ல முடியும்.

மேல்மாகாணத்தின் நீர் வளங்களை பாதுகாப்பது தொடர்பான ஒன்றிணைந்த வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் பாதுகாப்பான பயிர்த்தோட்டங்களை அமைப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேல்மாகாணம் செயலற்றதானால் முழு நாட்டிற்கும் அது பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும். பேலியகொட மீன்சந்தை மற்றும் மெனிங் பொதுச்சந்தை மூடப்பட்டதும் முழு நாட்டிற்கும் பாரியதொரு பாதிப்பினை ஏற்படுத்தியது.

மேலும், மேல்மாகாணத்தினை கேந்திர நிலையமாகக் கொண்டு முதலீடுகள் தொடர்பான வாய்ப்புக்கள் அமைகின்றன. அதனால் மேல்மாகாணத்தில் இந்த வரவு- செலவுத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# கொழும்பில் இரவோடு இரவாக அகற்றப்பட்ட கடைத் தொகுதிகள்





(கொழும்பு)

கொழும்பு பெஸ்டியன் மாவத்தை தனியார் பேருந்து நிலையத்திற்கும் புளொட்டிங் மார்க்கெட் கடைத் தொகுதிக்கும் இடையில் வீதியோரத்தில் அமைந்துள்ள சுமார் 100க்கும் மேற்பட்ட சிறிய கடைத் தொகுதிகள் கொழும்பு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நேற்று முன்தினம் இரவு அகற்றப்பட்டன.

பொலிஸாரின் பாதுகாப்புடன் குறித்த வீதி முற்றாக முடக்கப்பட்டு பல தொழிலாளர்களும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெக்கோ இயந்திரங்களினாலும் இக்கடைத் தொகுதிகள் முற்றாக அகற்றப்பட்டன.

இக்கடைத் தொகுதிகள் அகற்றப்பட்டதால் பலர் தமது தொழிலை இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

# தனிமைப்படுத்தப்பட்ட பெண் மரணம் இரகசியமாக புதைத்த குடும்பத்தினர்

(பேருவளை)

பேருவளையில் குடும்ப உறுப்பினர்கள் நால்வர் கொரோனாத் தொற்று ஏற்பட்டமை உறுதியான நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பெண் ஒருவர் திடீர் மரண மடைந்துள்ளார்.

அந்த பகுதியை சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவர் இரகசியமாக புதைக்கப்பட்டமை தொடர்பில் பேருவளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி பேருவளை சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்திற்கு வந்து நிகழ்ச்சி ஒன்றை நடத்துவதற்கு அனுமதி கோரியுள்ளனர்.

இதன்போது இந்த நபர்களின் குடும்பத்தினர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக வேறு ஒரு நபரால் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

அதற்கமைய சுகாதார பரிசோதகர்கள் குடும்பத்தில் 15 பேரிடம் மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையில் நால்வருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

அதன் பின்னர் வீட்டில் இருந்த அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அந்த வாரத்தில் அவர்களின் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் இரவில் குடும்பத்தினர் அவரை புதைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (நி-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சித்த மருத்துவத்தின் அடிப்படையில் நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள எமது யாக்கையின் இலக்கணம் (Personality)



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


யாக்கையின் இலக்கணத்தை ஆய்வு செய்வதன் மூலம் நோய்க்காரணங்களை சுலபமாகக் கண்டறியலாம். அதன் மூலம் அக்காரணிகளை ஒதுக்கி நோய் அண்ட விடாது பாதுகாத்துக் கெள்ளலாம். இரசாயன சிகிச்சை (காயகல்பம்), வாஜீகரண சிகிச்சை (சந்தான விருத்தியைத் தூண்டி நன் மக்களை அளித்தல்) மூலம் ஆரோக்கியத்தை அதிகரிக்கலாம். தன்னுடைய யாக்கையின் இலக்கணம் எது என்பதை அறிவதன் மூலம் ஒருவன் தனது தினசரி வாழ்க்கை முறையையும் கால மாற்றத்தின் போதுள்ள முறைகளையும் அனுசரித்து அதற்குரிய அறிவுரைகளையும் கடைப்பிடித்து நோய் அண்டாது பார்த்துக் கொள்ளலாம். ஒருவரின் உடல் மற்றும் மனம் சக்தி, திட சித்தம், உடம்பின் சகிப்புத் தன்மை, நோய் எதிர்ப்பு சக்தி ஆகியவற்றை அறிந்து கொள்ள யாக்கையின் இலக்கணம் உதவுகிறது. ஒருவரின் யாக்கையின் இலக்கணத்தை தொடர்ந்து ஆராய்வதன் மூலம் அவரின் உணவு முறை, வாழ்க்கை முறை என்பவற்றைத் திருத்திக் கொள்ள உதவும்.

இப்பொழுது நீங்கள் எந்த வகை என்பதைக் கண்டு பிடிக்கலாம். மூன்று உயிர்த் தாதுகளுக்கு ஏற்ப வாத, பித்த, கப யாக்கையின் இலங்கணங்களுக்குரிய குணங்கள் கீழே பட்டியல் இடப்படுகின்றது. அவற்றில் உங்களுக்குரிய குணங்களை மாத்திரம் தேர்ந்தெடுத்து உங்களது யாக்கையின் இலக்கணத்தை தெரிந்து கொள்ளுங்கள்.

மதிப்பெண்
0– எனக்குப் பொருந்தாது.
1–எப்போதாவது பொருந்தும்
2–சில சமயம் பொருந்தும்
3– அநேகமாகப் பொருந்தும்.

### பகுதி -01 வாத யாக்கையின் இலக்கணம்

–உடல் கட்டு மெலிந்திருக்கும்
–சதைப் பற்று மெலிந்திருக்கும்
–என்புகள் மெலிந்தவையாக காணப்படும். இணைப்புகள் தெளிவாகத் தெரியும்
– எவ்வளவு முயன்றாலும் சதை போடாது.
–கண்கள் கூர்மையானவை, சிறியவை.
–சருமம் வறட்சியாக இருக்கும்.
–பேச்சில் வறட்சியும் தளர்ச்சியும் காணப்படும்.
–ஆழ்ந்த உறக்கம் கிடையாது. எப்போதும் குழப்பமான உறக்கம் காணப்படும் (Disturbed sleep)
–அதிகம் வியர்க்காது.
– தலைமுடி சுருண்டு சொர சொரப்பாக இருக்கும்.
–உறங்கும் போது வாய் மற்றும் கண் சற்று திறந்து இருக்கும்.
–உறங்கும் போது பற்களைக் கடிப்பர்.



–கால் வெடிப்பு அதிகமாக இருக்கும்.
–வாத யாக்கை உடையவர்களின் உணவும் ஆசையும் ஒவ்வொரு நாளும் வேறுபடும்.
–இவர்களின் பேச்சு தடுமாற்றத்துடன் கடுமையாக இருக்கும்.
–நடக்கும் போது சத்தம் கேட்கும்.
–இனிப்பு சுவையில் விருப்பம்.
–இவ் யாக்கை உள்ள பெண்களுக்கு மாதவிடாய் ஒழுங்காக இருக்காது. ஆனால் வலி அதிகமாக இருக்கும்.
–இவர்களின் செயல்களில் திறம் இல்லாமல் இருப்பார்கள்.
–வாயுவின் வேகத் தன்மையால் எந்தவொரு காரியத்தையும் சீக்கிரமாகத் தொடங்கிவிடுவர்.
–ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தும் திறன் அற்றவர்கள்.
–மனதில் விருப்பும் வெறுப்புமாக உணர்ச்சிகள் மாறி மாறித் தோன்றி தளர்ச்சியை உருவாக்கும்.
–இவர்கள் வெப்பமான கால நிலையை விரும்புவர்.
–சீரான வாழ்க்கையை மேற்கொள்ள முடியாததாலும் இவர்களின் நிலையற்ற தன்மையாலும் ரஜோ குணத்தைக் கொண்டிருப்பர்.
–குளிர்ச்சியான காற்று, குளிர்ப் பிரதேசம் ஒத்துக் கொள்ளாது.
–அதிகமான குளிர்ச்சி உடலில் சேர்ந்து விட்டால் வலியும் விறைப்பும் ஏற்பட்டு அவதிப் படுவார்கள்.
–பொதுவாக இவர்கள் மலச்சிக்கல் பிரச்சினை உடையவர்கள்.
–மற்றவர்களைப் போல வலியைத் தாங்கும் சக்தி இல்லை.
–உரத்த சத்தத்தைக் கூட பொறுக்க மாட்டார்கள்.

### வாதத் தன்மை உடைய உடலினர் (வாத யாக்கையினர்) சாப்பிடக் கூடிய உணவுகள்.

● இனிப்பு,புளிப்பு, உப்புச் சுவை உடைய உணவுகளை எடுக்கலாம்.

● குத்தரிசி, கோதுமை, பாசிப்பயறு உகர்ந்தது.

● கரட், அவரை இனங்கள், தக்காளி, கத்தரி, வெண்டி, பூசணி, முட்டைக்கோவா, வாழைப்பழம், பேரீட்சை, திராட்சை, மாம்பழம், பலாப்பழம், மாதுளை, பப்பாளி, அத்தி, வேக வைத்த அப்பிள், பாலில் ஊறவைத்த பாதாம் பருப்பு, தேங்காய், வெள்ளரி, முள்ளங்கி, எலுமிச்சை, தோடை ஆகியன சிறந்தது.

● மஞ்சள், கொத்தமல்லி, சீரகம், இஞ்சி, பெருங்காயம், பெருஞ்சீரகம், மிளகு போன்றவற்றைத் தாராளமாக சேர்க்கலாம்.

● நல்லெண்ணெய், நெய், பால், வெண்ணெய் அளவோடு பயன்படுத்த வேண்டும்.

### தவிர்க்க வேண்டியவை

● துவர்ப்பு, கைப்பு, கார உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

● அதிக உடற்பயிற்சி, அதிகமான பேச்சு, குளிர்பானம், மது பானம், இரவு நெடுநேரம் விழித்திருத்தல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

வாத யாக்கையினருக்கு மூட்டு வியாதி, நரம்பு தளர்ச்சி, இருதயக் கோளாறு, ஆஸ்துமா, மலச்சிக்கல், மனத் தளர்ச்சி, உடல் நடுக்கம், சருமம் உலர்வு போன்றவை வர வாய்ப்பு உண்டு.

### என்ன செய்தால் நோய்களைத் தவிர்க்கலாம்?

வாயுவைக் கட்டுப்படுத்தும் பொருட்களுள் எள் நெய் சிறந்தது. இவர்களால் அதிக வீரியமுள்ள மருந்துகளை உட்கொள்ள முடியாது. எண்ணெய் மசாஜ் இவர்களுக்கு பிடித்தமானது.எண்ணெய்மசாஜ்ஆனது முறுக்கேறிய நரம்புகளை சமனப்படுத்துவதுடன் நரம்புகளின் உணர்வாற்றலைக் குறைப்பதால் உடல் மன வலிகளை ஓரளவு மட்டுப்படுத்தவும் செய்கிறது. மன அமைதியும் நற்சிந்தனையும்கொண்டிட்டதுநன்மை பயக்கும் ஆசனமும், தியானமும் செய்வது சிறப்புத் தரும்.

வாத யாக்கையினை உடையவர்களுக்கு சொல்லப்படும் குணங்கள் அனைத்தும் ஒருவரிடம் அப்படியே இருக்கும் எனச் சொல்ல முடியாது. எல்லோரிடமும் மற்றும் இரு தோஷங்களான பித்த, கப தோஷங்களும் கலந்தே இருக்கும் என்பதால் உடல் கூறு, மன இயல்பு, செயற்றிறன் அந்த அடிப்படையிலேயே அமைந்திருக்கும்.

நவீன மருத்துவத்தில் Type A personality என்பது இவர்களுக்கு சலனத் தன்மை (Restlessness) அதிகம் உண்டு. இருதய நோய் வர வாய்ப்பு உண்டு. இதுவே வாத யாக்கையின் இலக்கணம் ஆகும்.

### பித்த யாக்கையின் இலக்கணம் (பித்த தன்மை உடைய மனிதர்கள்)

– சாதாரண உடல் வாகு கொண்டிருப்பார்கள்.
–பசி, தாகம் தீவிரமாக இருக்கும்.
–தலைமுடி மிருதுவாக செம்பட்டை நிறத்திலிருக்கும்.
–பித்த மிகுதியால் விரைவில் நரைத்து விடும்.
–தைரியசாலிகள்.
–படிப்பில் ஆர்வம் உடையவர்கள்.
–மலம், சிறுநீர், வியர்வை என்பன அதிகளவில் வெளிப்படும் தன்மை உடையவர்கள்.
–சர்மத்தில் வியர்வைத் துர்நாற்றம் இருக்கும்.
–மிருதுவான தோல் இருக்கும்.
–சுக்கில தாது பலம் குறைவாக இருக்கும். எனவே சந்ததிகள் குறைவாக இருக்கும்.
–பித்த யாக்கையை உடையவர்களுக்கு தேக பலம் நடுத்தரமாக இருக்கும்.
–ஆயுளும் மத்திமமாக அமையும்.
–சடுதியாக கோபம் வரும் இயல்புடையவர்கள்.
–இவர்களது உடம்பு வெப்பமாக இருக்கும். ஆகவே இவர்களுக்கு இரத்தக் கொதிப்பு வர வாய்ப்பு அதிகம்.
–நகம் மிருதுவாக இருக்கும்.
–பல் ஈறுகளில் சீக்கிரத்தில் இரத்தம் கசியும். தன்மை இருக்கும்.
–உணவுப் பிரியர்களாக இருப்பர். அதிகமாகச் சாப்பிடுவார்கள்.

(தொடரும்)

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

**26**




## கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.


### தனி உறுப்பினர் பிரேரணைகள்

தனியார் உறுப்பினர் என்பது, சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதி தவிசாளர், பிரதம அமைச்சர், அமைச்சரவையின் அமைச்சர்கள், அமைச்சரவையல்லாத அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற சபை முதல்வர், பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற் கோலாசான் மற்றும் எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் ஆகிய எந்தவொரு பதவியையும் வகிக்காத உறுப்பினர் ஆவார்.

எவரேனும் தனியார் உறுப்பினரால் சமர்ப்பிக்கப்படும் பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பில் முக்கிய விடயங்கள் பற்றிய பிரேரணை தனியார் உறுப்பினர்களின் பிரேரணை என அறியப்படும். அத்தகைய பிரேரணைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும் அல்லது நிராகரிக்கப்படும்.

அவ்வாறான பிரேரணைகள் முதலாவதாக பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்படல் வேண்டும். தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்குக் குறிப்பீடு செய்த தினத்திற்கு முன்னர் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகம் அல்லது அனுபந்தத்தின் மூலம் அவை கிடைக்கப்பெறும் ஒழுங்கில் அறிவிக்கப்படும்.

எல்லா மாதங்களிலும் பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறும் முதலாவது வாரத்தின் வெள்ளிக்கிழமை தனியார் உறுப்பினர்கள் பிரேரணைகள் முன்னுரிமை பெறும்.

எனினும், தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் விவாதத்திற்கு எடுக்கப்படுவது பற்றி பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் தீர்மானிக்கப்படும்.

**தனியார் உறுப்பினர் என்பது, சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதி தவிசாளர், பிரதம அமைச்சர், அமைச்சரவையின் அமைச்சர்கள், அமைச்சரவையல்லாத அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற சபை முதல்வர், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற் கோலாசான் மற்றும் எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் ஆகிய எந்தவொரு பதவியையும் வகிக்காத உறுப்பினர் ஆவார். எவரேனும் தனியர் உறுப்பினரால் சமர்ப்பிக்கப்படும் பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பில் முக்கிய விடயங்கள் பற்றிய பிரேரணை தனியார் உறுப்பினர்களின் பிரேரணை என அறியப்படும்.**

சபாநாயகரினால் உறுப்பினரின் பெயர் அழைக்கப்பட்ட பின்னர், அவர் பிரேரணையைச் சமர்ப்பிப்பார். பின்னர் வேறொரு உறுப்பினரால் அப்பிரேரணை வழிமொழியப்பட்டு விவாதிக்கப்படும். இருந்தும் ஏற்புடைய உறுப்பினர் வருகை தந்திராவிடின், முறையாகத் தத்துவமளிக்கப்பட்ட வேறொரு உறுப்பினர் அத்தகைய உறுப்பினரின் அப்பிரேரணையைச் சமர்ப்பிக்க முடியும். இல்லையேல் அப்பிரேரணை வறிதாகும்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய, தனியார் உறுப்பினரொருவரின் 10 பிரேரணைகள் மாத்திரம் அவரின் பெயரில் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகம் அல்லது அனுபந்தத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

### தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகளை விவாதிப்பதற்கான நேர ஒதுக்கீடு

இதுபற்றி முன்னர் கூறப்பட்டது. தனியார் உறுப்பினர் பிரேரணைகள் அனைத்தும் சபையில் ஒரு மணி நேரம் விவாதிக்கப்படும். பிரேரிக்கும் உறுப்பினருக்கு 10 நிமிடங்களும் வழிமொழியும் உறுப்பினருக்கு 05 நிமிடங்களும், ஏனைய உரை நிகழ்த்தும் உறுப்பினர்களுக்கு 05 நிமிடங்களும் பதில் வழங்குவதற்கு ஏற்புடைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு 10 நிமிடங்களும் பிரேரித்த உறுப்பினருக்கு மீண்டும் 05 நிமிடங்களும் என்றவாறு குறிப்பிட்ட ஒரு மணி நேரம் ஒதுக்கப்படும். ஏதேனும் தனியார் உறுப்பினர் பிரேரணையொன்று அங்கீகரிக்கப்பட்டோ அல்லது அங்கீகரிக்கப்படாமலோ பாராளுமன்றக் கூட்ட அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஏற்புடைய தினத்திற்குரிய தனியார் உறுப்பினர் பிரேரணையின் விவாதத்திற்குப் பின்னர் மேலும் பின்னொரு தினத்தில் விவாதிப்பதற்கு எஞ்சியுள்ள பிரேரணைகள் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கமைய அறிவிப்பதன் பொருட்டு தனியார் உறுப்பினர் பிரேரணை விவாதத்திற்கு எடுக்கப்படும் வெள்ளிக்கிழமையன்றே அடுத்த தினம் வரை அறிவிக்கப்பட்டு பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் அல்லது அனுபந்தத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

**தனியார் உறுப்பினர் பிரேரணைகள்அனைத்தும்சபையில்ஒருமணி நேரம் விவாதிக்கப்படும். பிரேரிக்கும் உறுப்பினருக்கு 10 நிமிடங்களும் வழிமொழியும் உறுப்பினருக்கு 05 நிமிடங்களும், ஏனைய உரை நிகழ்த்தும் உறுப்பினர்களுக்கு 05 நிமிடங்களும் பதில் வழங்குவதற்கு ஏற்புடைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு 10 நிமிடங்களும் பிரேரித்த உறுப்பினருக்கு மீண்டும் 05 நிமிடங்களும் என்றவாறு குறிப்பிட்ட ஒரு மணி நேரம் ஒதுக்கப்படும்.**

### பாராளுமன்ற கூட்டத் தொடரினை நிறுத்துதல்

அரசியலமைப்பின் 70 (1) ஆம் உறுப்புரைக்கு ஏற்ப ஜனாதிபதி காலத்திற்கு காலம் பாராளுமன்ற கூட்டத் தொடரினை நிறுத்தமுடியும். பாராளுமன்ற கூட்டத்தொடரினை நிறுத்தும் காலப்பகுதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதியில் பாராளுமன்றத்தைக் கூடுமாறு ஜனாதியினது பிரகடனத்தின் மூலம் அழைப்பு விடப்படும்.

**அரசியலமைப்பின் 70 (1) ஆம் உறுப்புரைக்கு ஏற்ப ஜனாதிபதி காலத்திற்கு காலம் பாராளுமன்ற கூட்டத்தொடரினை நிறுத்தமுடியும். பாராளுமன்ற கூட்டத் தொடரினை நிறுத்தும் காலப்பகுதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதியில் பாராளுமன்றத்தைக் கூடுமாறு ஜனாதியினது பிரகடனத்தின் மூலம் அழைப்பு விடப்படும்.**

எனினும், பாராளுமன்ற அமர்வுக்கென நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முந்திய ஒரு திகதியிலிருந்தோ அல்லது இத்திகதியானது அத்தகைய பிரகடனத் திகதியிலிருந்து மூன்று நாட்களுக்கு குறைந்த ஒரு திகதியாக இருக்காதகவாறு பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கலாம். பாராளுமன்றம் முன்கூட்டியே பிரகடனம் செய்யப்படும்போது, புதிய அமர்வு ஆரம்பிக்கப்பட்ட திகதிக்கு பிரகடனம் செய்யப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் 70 (4) பிரிவின்படி : " பாராளுமன்றத்தின் முன்னர் உரிய முறையில் கொண்டுவரப்பட்டுள்ளவையும் பாராளுமன்றத்தின் அமர்வு நிறுத்தப்பட்ட நேரத்தில் முடிவுசெய்யப்படாதவையுமான எல்லாக் கருமங்களும் அடுத்த அமர்வின்போது விட்டநிலையிலிருந்து தொடர்ந்து கையாளப்படலாம்.

பாராளுமன்ற அமர்வு நிறுத்தப்பட்டுள்ள போதும் சபாநாயகர் தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருப்பார், பாராளுமன்ற அமர்வுகள் இடம்பொறாதபோதும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் உறுப்பினர்கள் பதவியினைத் தக்க வைத்துக்கொள்வர்.

பாராளுமன்ற கூட்டத் தொடரினை நிறுத்துவதன் விளைவாக அரசியல் குற்றச்சாட்டினைத்தவிர ஏனையவை பாராளுமன்ற அனைத்து அன்றைய தின அலுவல்களையும் அந்த நேரத்தில் நிலுவையிலுள்ள அனைத்து அலுவல்களையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும்.

அதே அமர்வுக்கு ஒரு சட்டமூலம் , ஒத்திவைப்பு பிரேரணை அல்லது கேள்விகளை ஒரே அமர்வின் போது இரண்டாவது முறையாக அறிமுகப்படுத்த முடியாது. இருப்பினும், பாராளுமன்ற கூட்டத் தொடருக்கான அழைப்பின் பின்னரான அடுத்தடுத்த அமர்வுக்கு அறிமுகப்படுத்தப்படலாம்.

ஒரு பாராளுமன்ற கூட்டத்தொடர் நிறுத்தப்படுகின்றபோது நிலுவையிலுள்ள பாராளுமன்ற அலுவல்கள் முடிவுறுத்தப்படுவதில்லை. எனவே, புதிய அமர்வு தொடங்கப்பட்ட பின்னர், நிலுவையிலுள்ள அலுவல்களைத் தொடரலாம்.

ஒரு புதிய அமர்வின் தொடக்கத்தில் தெரிவுக்குழு மறுசீரமைக்கப்பட வேண்டும். உயர் பதவிகளின் குழு பாராளுமன்ற கூட்டத்தொடர் அழைக்கப்படும் போது தொடர்ந்து செயற்படத் தொடங்கும். மற்றைய அனைத்துக் குழுக்களும் குறித்த கால இடைவேளையின் போது செயற்படத் தொடங்கி ஒவ்வொரு புதிய அமர்வு ஆரம்பத்திலும் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

ஒரு கூட்டத்தொடர் முடிவின்பின்னர் புதிய அமர்வு தொடங்குகின்றபொழுது அதனை ஜனாதிபதி சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார். பாராளுமன்றத்தின் புதிய அமர்வு தொடங்குவதற்கும் மற்றும் தலைமை தாங்குவதற்கும் அரசாங்கக் கொள்கைப் பிரகடனத்தை வெளியிடுவதற்கும் அவர் அரசியலமைப்பின் கீழ் அதிகாரம் அளிக்கப்படுகிறார்.

பாராளுமன்ற கூட்டத்தொடர்கள் கடந்த காலத்ததில் பதினைந்து தடவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக பதிவுகள் வெளிப்படுத்துகிறது. 1958 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27 ஆம் திகதி இனவாத வன்முறை வெடித்தனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தினை அழைத்த ஆளுநர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலக அவசரகாலச் சட்டத்தினைப் பிரகடனம் செய்து பாராளுமன்றத் கூட்டத்தொடரினை நிறுத்தினார். அதன்படி பாராளுமன்றம் ஆனி மாதம் 1958 இல் கூடியது. இது ஒரு தனிப்பட்ட சூழ்நிலையாகும்.

### கொள்கைப் பிரகடனம்

கடந்த காலத்தில், ஆளுநர்-ஜெனரலினால் வழங்கப்பட்ட அக்கிராசன பிரகடனத்தின் மூலமாக புதிய பாராளுமன்ற கூட்டதொடரின் முதலாவது அமர்வின் தொடக்கத்தில் அரசின் கொள்கைப் பிரகடனம் ஒன்றைச் செய்வதற்கு ஜனாதிபதி தகுதி பெற்றுள்ளார்.

ஆளுநர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலக 1960 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 6 ஆம் திகதி கொள்கைப் பிரகடனத்தினை வாசித்தார். கொள்கைக் பிரகடனத்திற்கு எதிர்க் கட்சிகள் சார்பாக 86 வாக்குகள் அரசுக்கு எதிராகவும் 61 வாக்குகள் அரசுக்கு சார்பாகவும் மற்றும் 6 உறுப்பினர் வாக்களிப்பில் கலந்து கொள்ள வில்லை.

(தொடரும்...)

# நுவரெலியாவில் அதிகரிக்கும் கொரோனா தொற்றாளர்கள்

(நுவரெலியா)

நுவரெலியா- லிந்துலை சுகாதார மருத்துவ காரியாலயத்திற்குட்பட்ட பிரிவில் பதினைந்து கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

டயகம மேற்கு தோட்டத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 11 பேருக்கும், அக்கரப்பத்தனை நியூ போர்ட்மோர் தோட்டத்தைச் சேர்ந்த மூன்று பேருக்கும், லிந்துலை வோல்ட்ரீம் தோட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில், டயகம மேற்கு 4ம் பிரிவு தோட்டத்திற்கு கடந்த 11 ஆம் திகதி கொழும்பிலிருந்து வருகை தந்த சமயத் தலைவர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வருகை தரும்பொழுது, கினிகத்தேனை- களுகல பகுதியில் அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்துள்ளனர்.


இதனையடுத்து, அவர் டயகம மேற்கு 4 ஆம் பிரிவு தோட்டத்தில் அவரின் உறவினர் வீட்டில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டது மட்டுமன்றி, அப்பகுதியில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளிலும் பங்கேற்றுள்ளமை விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது.

அதன்பின்னர், அப்பகுதியிலுள்ள 10 குடும்பங்களை சேர்ந்த 50ற்கும் மேற்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இதில் கடந்த 14 ஆம் திகதி குறித்த மதத்தலைவரின் உறவினர் வீட்டில் இருந்த 12 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 11 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது நேற்று கண்டறியப்பட்டது.

ஏனைய பகுதிகளில் உள்ள தொற்றாளர்கள் கொழும்பு பகுதிகளிலிருந்து வருகை தந்தவர்கள் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## வாழ்வை பிரகாசமாக்கும் தீபாராதனை

(தொடர்ச்சி)

அடுத்து காட்டப்படும் விசிறியை உபசரிப்பதால் ஆயிரம் கோடி வருடம் வாயு உலகில் சௌக்கியமாக இருப்பார்கள். சில சிவாலயங்களில் மயில் தோகை விசிறி மூலம் மூலவரை உபசரிப்பார்கள். இந்த வழிபாட்டால் அளவு கடந்த பேரானந்தம் உண்டாகும்.

பிறகு வெள்ளைத்துணியால் இறைவனுக்கு வீச வேண்டும். இது ஒரு முகமாக சிவத்திடம் கொண்டு போய் நம்மை சேர்ப்பிக்கும். இறுதியில் நீராஜனம்-கற்பூர தீபம் காட்டி முடிக்கவும்.

தீபாராதனை வழிபாடு எண்ணற்ற பலன்களைத் தரக்கூடியதாகும். சுவாமிக்கு நாம் எந்த அளவுக்கு தூபம் போடுகிறோமோ அந்தளவுக்கு நமது பாவங்கள் விலகும். அனைத்து வகை தீபாராதனைகளைப் பார்ப்பதால் பகைவர் மூலம் ஏற்படும் இன்னல்கள் நீங்கும். மனதில் அமைதி உண்டாகும். நீராஜனம் - கற்பூர தீபம் கண்டால் மேல் உலக பலன்கள் வந்து சேரும்.

தீபாராதனை காட்டப்படும் விடயத்தில் ஒரு விடயத்தை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். கற்பூரம் காட்டும் போது மறக்காமல் மணியோசை ஒலிக்க வேண்டும் ஏன் தெரியுமா? கோவிலில் ஒவ்வொருவரும் மற்றவர்களிடம் ஏதாவது பேசிக்கொண்டிருப்பார்கள். மணி அடிக்காமல் தீபம் காட்டினால் அவர்கள் பேச்சு தொடரத்தான் செய்யுமே தவிர மனம் இறைவன் பக்கம் வராது.

மணியடித்துக் கொண்டே தீபம் காட்டத் தொடங்கினால் பேச்சை நிறுத்தி விட்டு சாமி கும்பிடத் தொடங்கி விடுவார்கள். ஒருவேளை அவர்கள் தொடர்ந்து பேசினாலும் மணியோசை சத்தத்தில் அது யாருக்கும் கேட்காது.

தீபாராதனையின் போது எழுப்பப்படும் மணியோசைக்கு பக்தர்களின் கவனத்தை ஒருமிக்கச் செய்யும் சக்தி உண்டு. அதுமட்டுமன்றி கோவிலில் எழும் மணியோசை ராட்சகர்களையும் துர்தேவதைகளையும் விரட்டி விடும். எனவே பூஜைமணி ஒலிப்பது முக்கியமானது.

சுவாமிக்கு செய்யப்படும் பல்வேறு உபசாரங்களில் எது வேண்டுமானாலும் விடுபடக்கூடும். அல்லது அவற்றை செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படலாம். ஆனால் தீபாராதனை மட்டும் விலக்கவே முடியாது. தீபாராதனை இல்லாமல் உபசாரமே இல்லை. இதில் இருந்தே தீபாராதனையின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

பரம்பொருள் என்றைக்கும் அணையாத ஆத்மப் பிரகாசமாய் இருக்கிறார். அவருக்கு காட்டப்படும் தீபம் எண்ணிக்கை முதலில் அதிகமாகத் தொடங்கி பிறகு குறைந்து கொண்டே வர வேண்டும்.

கடைசியில் ஒரு தீபத்தில் வந்து தீபாராதனை முற்றுப்பெற வேண்டும். இதன் அடிப்படை தத்துவம் என்ன தெரியுமா? ஏகமாய் உள்ள பரமாத்மாவே எண்ணற்ற ஜீவாத்மாக்களாகப் பிரகாசித்து கொண்டிருக்கிறார் என்பதாகும்.

சரி...தீபாராதனை காட்டப்படும் தத்துவத்தை புரிந்து கொண்டு விட்டீர்கள். தீபம் காட்டி முடித்ததும் அர்ச்சகர் நமக்கு விபூதி - குங்குமம், தீர்த்தம் தருவார். அந்த விபூதி, குங்குமத்தை நம் உடம்பில் எந்தெந்த இடங்களில் எப்படி பூச வேண்டும் என்பதற்கு ஐதீனம் உள்ளது. அதன்படி விபூதி பூசுவது எப்படி என்பதை காணலாம்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## திவுலபிட்டிய-பேலியகொட கொத்தணி 33 ஆயிரத்தைக் கடந்தது

(பேலியகொட)

திவுலபிட்டிய -பேலியகொட கொத்தணியில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 954 ஆக உயர்ந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மேலும் 370 பேர் கொரோனா தொற்றாளர்களாக நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டனர்.

அதில் 364 பேர் திவ்லபிட்டிய - பேலியகொட கொத்தணியில் நெருங்கிய தொடர்புகொண்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். .

இதனையடுத்து திவுலபிட்டிய -பேலியகொட கொத்தணியில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 954 ஆக உயர்ந்துள்ளது. (நி-4)

## மட்டக்களப்பில் கடும் மழை; பல பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக போரதீவுப்பற்று பிரதேசத்தின் பல பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மழை காரணமாக தாழ் நிலங்களை அண்டிய கிராமங்களான பழுகாமம் கோவில் போரதீவு, பட்டாபுராம், பெரிய போரதீவு, முனைத்தீவு ஆகிய கிராமங்களில் மழை நீர் உட்புகுந்துள்ளமையினால் மக்களின் வீடுகள் மற்றும் வீதிகள் வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளன.

தொடர்ச்சியான மழை காரணமாக மட்டக்களப்பு மண்டூர் வீதி உட்பட சில பிரதான வீதிகளின் ஊடாகவும் வெள்ள நீர் பாய்வதன் காரணமாக மக்கள் போக்குவரத்தை மேற்கொளவதில் சிக்கல் நிலையேற்பட்டுள்ளது. (நி-4)

## பதுளையில் மீன் மழை

(பதுளை)

பதுளை மற்றும் மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 'விரானகம' என்ற கிராமத்தில் மீன் மழை பொழிந்துள்ளது. கடந்த 20 மற்றும் 21 ஆகிய இரு தினாங்களிலும் மீன் மழை பெய்ததாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

வீடு மற்றும் வயல் நிலங்களுக்கு முன்னால் இவ்வாறு மீன்கள் விழுந்தன எனவும் இதற்கு முன்னர் இப்பகுதியில் இவ்வாறு எதுவும் நடைபெறவில்லை எனவும் பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டினர்.

மழைக்கு மத்தியிலும் மக்கள் வீதியில் இறங்கி, விழுந்த மீன்களை பக்கெட்டுகளில் சேமித்து எடுத்து சென்றுள்ள சம்பவமும் இடம்பெற்றது. (நி-4)

## கொரோனா வைரஸ் பரவல் சிக்குண்ட பலர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். அதன்படி, ஜேர்மனியிலிருந்து 267 பேர், ஐக்கிய அரபு இராச்சியிலிருந்து 48 பேர் கட்டாரிலிருந்தும் 57 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று செவ்வாய்க்கிழமை காலை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்ளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (நி-4)



# சிறுவர் அரங்கம்

## கறுப்புத் துணி

ஒரு தடவை முல்லா வியாபார நிமித்தமாக பெரிய நகரம் ஒன்றுக்குச் சென்றிருந்தார். அங்கே அவருக்குத் துணை யாக ஒருவன் வந்து சேர்ந்தான்.

அவனுக்கு எடுத்தற்கெல்லாம் சந்தேகப்படுவதையே தன்னுடைய நோக்கமாகக் கொண்டிருந்தான்.

அந்தப் பெரிய நகரத்தை பார்த்ததும் அவனுக்குப் பிரமிப்பாக இருந்தது. சந்து பொந்தெல்லாம் மக்கள் இவ்வாறு நிரம்பி வழிகிறார்களே. தாங்கள் தங்கியுள்ள விடுதியை எவ்வாறு கண்டுபிடிப்பார்கள்?

அவ்வளவு ஏன். மக்கள் தங்களைத் தாங்களே கூட அடையாளம் கண்டுகொள்வது சிரமந்தான் இவ்வாறெல்லாம் அந்தச் சந்தேகப் பிராணி பேசிக் கொண்டேயிருந்தான்.

அந்த சந்தேகப் பிராணியும் முல்லாவும் அன்று இரவைக் கழிப்பதற்காக ஒரு விடுதியில் சென்று தங்கினர்.

முல்லா அவர்களே எனக்கு ஒரு யோசனை சொல்லுங்கள். காலையில் நான் கண் விழிக்கும் போது என்னையே மறந்து விட்டால் அடையாளம் கண்டுகொள்ள ஏதேனும் வழி உண்டா? என்று கேட்டான்.

அதற்கு முல்லா ஒரு கறுப்புத் துணியை எடுத்து உமது ஒரு காலில் சுற்றிக் கட்டிவிடும். காலையில் உறங்கி எழுந்ததும் உமது காலைப் பாரும். கறுப் புத்துணி காலில் இருந்தால் நீர்தான் என்று அடையாளம் கண்டு கொள்ளலாம் என்றார்.

சந்தேகப் பிராணி முல்லா கூறியதைப் போலவே தன் காலில் ஒரு கறுப்புத் துணியைக் கட்டிக்கொண்டு படுத்து விட்டான். அவன் நன்றாக உறங்கிய பிறகு அவன் கட்டியிருந்த கறுப்புத் துணியை அவிழ்த்து முல்லா தம்முடைய காலில் கட்டிக்கொண்டார்.

அவன் காலையில் எழுந்தவுடன் ஐயோ நான் காணாமல் போய்விட்டேன். என் காலில் இருந்த துணியைக் காணவில்லை என்று கூச்சலிட்டுக் கொண்டே அருகில் படுத்திருந்த முல்லாவின் காலைப் பார்த்துவிட்டு நான் அகப்பட்டு விட்டேன் நீர்தான் நான் என்று சத்தம் போட்டான்.

முல்லா சிரித்துக்கொண்டே எழுந்து அந்தச் சந்தேகப் பிராணிக்கு ஏற்பட்டிருந்த சந்தேகப் பிரமையை அகற்றி அவனுக்குதெளிவை உண்டாக்கினார்.

**நீதி: சந்தேகம் என்பது ஒரு பிரமை. அதை நீக்கி தெளிவு பெற வேண்டும்.**



# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சென்றதில்லையா? வென்றதில்லையா?

63

பெரும்பாலும் யுத்தக் களத்தில் இடதுபுறத்தில் இருக்கும் குதிரைப் படை தெஸ்ஸாலியப் படைகளாகத்தான் இருப்பது வழக்கம்.

கிரீக் மெர்சினரிஸ் என்பதும் முக்கியமான நேசப்படைகளுள் ஒன்று. இவர்களுடைய பங்கு பெரும்பாலும் காலாட் படையில்தான் இருந்தது.

மாசிடோனிய மன்னர்கள் கைப்பற்றிய நாடுகளில் இருந்து இந்த நேசப்படைக்கு வந்து பணியாற்ற விரும்புகிறவர்கள் இந்தப் படையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

எதிரி நாட்டைச் சேர்ந்தவர்கள் தான். ஆனாலும் நேசப்படையில் தங்களை இணைத்துக் கொண்ட அடுத்த நொடியில் இருந்து மனதளவில் மாசிடோனியர்களாக மாறிவிடுவார்கள்.



தெஸ்ஸாலிய குதிரைப்படை

அவர்களுள் ஒருவராகவே யுத்தங்களில் பங்கேற்பார்கள். மாசிடோனியாவுக்கும் மாசிடோனிய மன்னருக்கும் விசுவாசமாகவே நடந்து கொள்வார்கள்.

அலெக்சாண்டரின் படையில் உத்தரவைப் பிறப்பிக்கும் அதிகார வட்டம் என்றைக்குமே குறுகலாக இருந்ததில்லை. நீ இதைப் பார்த்துக்கொள். அவன் அதைப் பார்த்துக் கொள்ளட்டும். இவன் இதைப் பார்த்துக்கொள்ளட்டும். உங்கள் அனைவரையும் நான் பார்த்துக் கொள்கின்றேன். இதுதான் அலெக்சாண்டரின் பாணி.

தெளிவான திட்டம். திட்டமிட்ட காய் நகர்த்தல்கள் இதுதான். வெற்றியின் தாரக மந்திரம் இது தான். உத்தரவைப் பிறப்பிக்கும் நபர்களின் சரிசையில் முதல் இடம் மன்னர் அலெக்சாண்டருக்கு. அவருக்கு அடுத்த இடம் தளபதி பார்மீனியோவுக்கு.

மாகாண அளவில், மாவட்ட அளவில், நகர அளவில் என்றெல்லாம் அதிகார வட்டம் பரவியிருந்தது. சகல அதிகாரங்களும் கொண்டவர் அலெக்சாண்டர் மட்டும்தான். ஆனாலும் அவர் சர்வாதிகாரியாக இருக்கவில்லை.

மூத்தவர்களை மதித்தார். தொழுதார். ஆலோசனைகள் தேவைப்படும்போது கேட்டார். அவர்களாகக் கொடுக்கும்போது பிடித்தால் ஏற்றுக் கொண்டார். மறுதலித்து பேசவுமில்லை. மண்டியிடவும் இல்லை.

(தொடரும்)

நீங்கள் அனைவரும் பெரிய காரியங்களைச் செய்யப் பிறந்தவர்களே என்ற நம்பிக்கை கொள்ளுங்கள். குட்டி நாய்களின் குரைத்தலைக் கண்டு நடுங்காதீர்கள். – விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரவை களத்தில் இறங்க வேண்டும்

2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது.

2020 டிசம்பரில் ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், தமிழ் மக்கள் பேரவையின் எழுக தமிழ் எழுச்சி தமிழ் மக்களிடையே நம்பிக்கையையும் உத்வேகத்தையும் கொடுத்திருந்தது.

இதற்கு மேலாக, தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வாக தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டத்தை தமிழ்த் தரப்புகள் கூட்டாக முன்வைக்கக் கூடிய அளவில், குறித்த தீர்வுத் திட்டம் மிக ஆழமாக ஆராய்ந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

பேரவை தயாரித்த தீர்வுத் திட்டமானது தமிழ் மக்களின் கருத்துக் கணிப்புகளையும் அவர்களின் ஆலோசனைகளையும் உள்ளடக்கியதாக இருப்பதுடன் தமிழ் மக்கள் முன்னிலையில் அந்தத் தீர்வுத் திட்டம் வெளியிட்டு வைக்கப்பட்டதும் இங்கு பதிவுக்குரிய விடயங்களாகும்.

இவ்வாறாக, தமிழ் மக்களின் உரிமையிலும் நலன்களிலும் கரிசனை கொண்டு செயற்பட்டு வரும் தமிழ் மக்கள் பேரவையை இன்னும் வலுதாக்குவதற்கு தமிழ் அரசியல் கட்சிகளின் வகிபங்கு அவசியமாகிறது.

இருந்தும் அரசியல் மூலமாகப் பதவிகளைப் பெறுவதற்காக தமிழ் மக்கள் என்று கோசமிடுகின்ற பொய்மை பூத்திருக்கின்ற நம் மத்தியில்; தமிழ் மக்கள் பேரவை போன்ற மக்கள் இயக்கத்தின் எழுச்சியை சில தமிழ் அரசியல் தரப்புகள் விரும்பவில்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

எதுஎவ்வாறாயினும் தமிழ் மக்களின் விடயம் சார்ந்து ஜெனிவாவைக் கையாள்வது எங்ஙனம் என்பதை ஒழுங்குபடுத்துகின்ற பெரும் பொறுப்பை தமிழ் மக்கள் பேரவை செய்தாக வேண்டும்.

ஈழத் தமிழர்கள் எங்ஙனம் ஜெனிவாவைக் கையாள வேண்டும் என்பது தொடர்பில், தமிழ் அரசியல் தரப்புகள் மற்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கக்கூடிய தமிழ்ப் புத்திஜீவிகள், ஜெனிவா விவகாரங்களில் அனுபவமுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆகியோரை உள்ளடக்கியதான ஒரு கருத்தாடலை ஏற்பாடு செய்வதனூடாக சரியான வழிப்பாதையை நாம் தெரிவு செய்ய முடியும்.

இது விடயத்தில் தமிழ் மக்கள் பேரவை களமிறங்காதவிடத்து, ஜெனிவா விடயத்தில் தமிழ் அரசியல் தரப்புகள் தம்மளவில் முரண்பட்டு – முட்டுப்பட்டு – ஊடகங்கள் வாயிலாக வெறுப்பேற்றி எதுவும் செய்ய முடியாத நிலைமைக்கே நம்மை இட்டுச் செல்லும்.

ஆகையால் துறைசார்ந்தவர்களின் ஆலோசனைகள், பரிந்துரைகளுடன் ஒட்டுமொத்தத் தமிழ் அரசியல் தரப்புகளும் ஒன்றிணைந்து ஒரு தீர்க்கமான முடிவை எட்டுவதற்கான வழிவாய்க்காலை தமிழ் மக்கள் பேரவை செய்தாக வேண்டும்.

# சர்வதேச விசாரணையே எமது நிலைப்பாடு அழுத்திக் கூறுகிறார் செல்வம் அடைக்கலநாதன்

(யாழ்ப்பாணம்)

மனிதவுரிமை ஆணையத்தின் கூட்டத் தொடரில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட்டு இலங்கை அரசினால் நடத்தப்பட்ட சர்வதேசக் குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும். எந்தவிதமான கால அவகாசத்திற்கும் இடமளிக்க முடியாது. இலங்கை அரசினை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு பாரப்படுத்தப்பட வேண்டும்என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக உள்ளோம் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே 2019 மார்ச் மாத மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத் தொடரில் இதன் அடிப்படையில் எமது கட்சியால் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. எமது கட்சியின் 2019இல் நடத்தப்பட்ட பொதுக்குழுக் கூட்டத்தில் விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு, அந்த அறிக்கையில் நானும், புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னே ஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அனந்தி சசிதரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி ஆகியோர் கையொப்பமிட்டு மனிதவுரிமைகள் ஆணையத்தின் தலைவரிடம் நேரடியாக கையளிக்கப்பட்டது.

அதில் கூறப்பட்ட முக்கிய விடயங்களாக, இலங்கைஅரசைவிசேட சர்வதேச விசாரணை பொறிமுறையின்மூலம் விசாரணைக்குட்படுத்தல் வேண்டும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தல் வேண்டும். இலங்கைக்கு ஒரு விசேட அறிக்கையாளர் அமர்த்தப்பட்டு இவ்விடயங்கள் சம்பந்தமான அறிக்கைகள் சமர்ப்பித்து ஆராயப்படவேண்டும், கால அவகாசம் வழங்கலாகாது என்பன உள்ளடக்கம் பெற்றுள்ளன. இந்த நிலைப்பாட்டில் இருந்து ரெலோ பின்வாங்காது.

அண்மையில் சுமந்திரனால் வழங்கப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில், அது கூட்டமைப்பின் நிலைப்பாடு என்று கூறப்படுவதை நாங்கள் நிராகரிக்கிறோம். அந்த ஆவணம் எங்களிடம் கையளிக்கப்படவில்லை. அதன் உள்ளடக்கம் என்ன என்பதும் எங்களுக்கு தெரியாது. அப்படி இருக்கும் பொழுது அதை கூட்டமைப்பின் நிலைப்பாடு என்று கூறுவது ஏற்புடையதல்ல.

கூட்டமைப்பின் நிலைப்பாடு என்பது அங்கத்துவ கட்சிகளாகிய நாங்களும் சேர்ந்து அறிவிக்கின்ற முடிவாக இருக்குமே தவிர தனிப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் அமைய முடியாது என்பதையும் வலியுறுத்துகிறோம். இந்த விடயத்தில் அர்ப்பணிப்போடு செயலாற்றும் எமது புலம்பெயர் மற்றும் சர்வதேச அமைப்புகளும் எல்லோரையும் உள்ளடக்கி ஒன்றுபடுத்திய கருத்துக்களை தயாரிப்பதில் முனைப்புடன் செயற்பட வேண்டும். நம்முடைய இனத்தினுடைய கோரிக்கைகளை சர்வதேச மட்டத்தில் வெற்றி பெறச் செய்ய தாயகத்தில் இருக்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கட்சி பிரதிநிதிகளின் பங்களிப்பு அவசியம் என்பதை கருத்தில் கொள்ளவும் வேண்டுகிறோம் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### யாரைத் தேர்ந்தெடுப்பது?

❖ நல்லநெறிமுறைகளில் இருந்து பிறழாதவனும், மக்களின் துன்பத்தை தன் துயரமாகக் கருதுபவனும், வீரம் நிறைந்தவனும், மானம் கொண்டவனுமாக இருப்பவனே நல்ல அரசன்.

❖ மக்களை ஆட்சி செய்யும் பொறுப்பில் உள்ளவர்கள் கடமையைச் செய்வதில் காலம் தாழ்த்தாதவராகவும், கல்வி அறிவு பெற்றவராகவும், நெஞ்சில் மிகத் துணிவுள்ளவ ராகவும் இருத்தல் வேண்டும்.

❖ பார்ப்பதற்கு எளியவனாகவும், மக்கள் அணுகும் விதத்திலும், கடுஞ்சொல் என்பதே அறியாதவனாகவும் இருக் கும் மன்னன் எவனோ அவனை மக்கள் போற்றுவர்.

❖ வருவாய்க்கான நல்ல அற வழிவகைகளை தோற்று விப்பவனும், அவ்வழிகளில் ஈட்டிய பொருளை காத்து மக்களுக்கு அறப்பணிகளைச் செய்பவனுமே நல்ல நிர்வாகியாவான்.

❖ ஆட்சியில் தவறு நடக்கும்போது இடித்துரைப்பதை ஏற்கும் பக்குவமும், பிறர் கூறும் கடுஞ்சொற்களைப் பொறுத்துக் கொள்ளும் தன்மையும் கொண்டு தன்னை திருத்திக் கொள்பவனின் கீழ் உலகமே அடங்கி நிற்கும்.

# யாழுக்கு கடத்தி வரப்பட்ட 15 மாடுகள் மீட்பு!

## இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியிலிருந்து எந்தவொரு அனுமதியும் பெறாமல் யாழ்ப்பாணத்திற்கு கடத்தி வரப்பட்ட 15 மாடுகள் கேரதீவு - சங்குப்பிட்டி பகுதியில் பாதுகாப்பு தரப்பினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள சோதனை சாவடியில் பாரவூர்தி ஒன்றை சோதனையிட்ட போதே மாடு கடத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

இதன்போது மாடுகளை கடத்திவந்த குற்றச் சாட்டில் முஸ்லிம் நபர் ஒருவரும், தமிழ் நபர் ஒருவரும் பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களும், கைப்பற்றப்பட்ட மாடுகள் மற்றும் பாரவூர்தி ஆகியனவும் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ம-3)



## சிதம்பர தரிசனம்

ஈழத்துச் சிதம்பரத்தில் (2020.12.23) திருவெம்பாவை 3ஆம் நாள்

### பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்

பிட்டுக்கு மண் சுமந்த பெருமானை, மனையாட்டி
கட்டுக்குள் கைகட்டி நின்றானை, கணக்கின்றிப்
பிரம்படிகள் பெற்றானை பேசும் திருவாசகத்தில்
தரம் காத்து வாழ்வானை தமிழ்காத்து ஆள்வானை
இடுகாட்டில் கூத்தாடி இரவெல்லாம் அலைவானை
இடும்பா வனத்தில் எழுந்து இறையாகிக் காப்பானை
முல்லை மலர்போல முத்தமிழைப் பூப்பானை
தில்லைப் பெருமன்றில் திருநடனம் செய்வானை தரிசிப்போம்

செந்நாப்புலவர் மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்

# புதியவகை கொரோனா வைரஸ் ஆபத்தானது என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை

## உலக சுகாதார அமைப்பு




**(ஜெனீவா)**

**இங்கிலாந்தில் புதிய வகை கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுவதாகக் கூறப்பட்டாலும் இது மிகவும் ஆபத்தானது என்பதற்கான எந்த ஆதாரங்களும் இல்லை என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் தெரிவித்துள்ளார்.**

இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகளில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் குறித்து விளக்கமளிக்கும் வகையில் ஜெனீவாவில் உள்ள உலக சுகாதார அமைப்பின் தலைமையகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய வகை வைரஸ் வேகமாகப் பரவ அதிக வாய்ப்பு உள்ளது. ஆனால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் அதிக வாய்ப்பு உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

புதிய வைரஸ் தொடர்பான விவகாரங்களை நாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம். புதிய வைரஸ் பரிமாற்ற வீதம் அதிகமாக உள்ளதை அவதானிக்க முடிகிறது என கோவிட்19 தொற்று நோய் தொடர்பான உலக சுகாதார அமைப்பின் நிபுணர் மரியா வான் கெர்கோவ் தெரிவித்தார்.

எனினும் இந்த வைரஸ் அதிகளவு தாங்கங்களை ஏற்படுத்துமா? உயிரிழப்புக்கான சாத்தியங்கள் இதனால் அதிகம் உள்ளதா? என்பது குறித்து ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர். இதுவரை அது குறித்து அறிவியல் ரீதியில் எதுவும் நிரூபிக்கப்படவில்லை.

அத்துடன் இந்த திரிவு வைரஸ் தடுப்பு மருந்துகளில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்துகிறதா? என ஆராய்வதாகவும் மரியா வான் கெர்கோவ் தெரிவித்தார். (4)

# நேரலையில் தடுப்பூசி போட்டுக்கொண்டார் பிடன்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோ பிடன் கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொண்டுள்ளார்.

அமெரிக்க மக்களுக்கு கொரோனா தடுப்பூசி மீதான நம்பகத்தன்மையை அதிகரிக்கும் வகையில், டெலாவேர் மாகாணத்தில் நெவார்க் நகரில் உள்ள வைத்திய சாலை ஒன்றில் ஜோ பிடன் கொரோனா தடுப்புக் கான பைசர் மருந்தின் முதல் டோஸை போட்டுக்கொண்டார்.

ஜோ பிடனுக்கு கொரோனாத் தடுப்பூசி போடும் நிக்ழ்வு அமெரிக்க செய்தி தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளது.

அப்போது பேசிய அவர், " மருந்து கிடைக்கும்பொழுது அதனைப் பெற்றுக் கொள்ளுங்கள், கவலைப்பட ஒன்றுமில்லை." என நாட்டு மக்களை வலியுறுத்தியுள்ளார். (4)

# 9 வயதில் 200 கோடி




(வோஷிங்டன்)

இந்த ஆண்டு யூ டியூப்பில் அதிகம் சம்பாதித்த பட்டியலில், அமெரிக்காவை சேர்ந்த 9 வயது சிறுவன் முதல் இடம் பிடித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூ ஜெர்சியைத் தலைமையிடமாக வைத்து இயங்கும் போர்ப்ஸ் இதழ் இந்த ஆண்டில் அதிகம் சம்பாதித்த யூ டியூபர்களின் பட்டியலை அண்மையில் வெளியிட்டது.


அதில் இந்த ஆண்டும் அமெரிக்காவைச் சேர்ந்த ரியான் காஜி என்ற 9 வயது சிறுவன் முதலிடம் பிடித்துள்ளார்.

**Ryans world** என்ற யூ டியூப் சனலை ஆரம்பித்திருக்கும் ரியான் காஜி குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களை வாங்கி அதை திறந்து பார்த்து அதில் தனக்கு பிடித்தது மற்றும் பிடிக்காதது குறித்து காணொளி வாயிலாக கூறுவான்.

ரியானின் இந்த காணொளிகளை 1200 கோடி முறை பார்வையாளர்கள் பார்த்துள்ளனர். சனலை 2 கோடிக்கும் அதிகமானோர் பின்பற்றுகின்றனர்.

இதன் மூலம் ஆண்டு 200 கோடி ரூபாய் அளவிற்கு ரியான் சம்பாதித்துள்ளதாக போர்ப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. (4)

# பயன்பாட்டிலுள்ள தடுப்பூசிகள் புதியவகை கொரோனா வைரஸையும் கட்டுப்படுத்தும்



(பேர்லின்)

பைசர் நிறுவனத்தின் பயன்பாட்டில் உள்ள கொரோனாத் தடுப்பூசிகள் புதிய வகை கொரோனா வைரஸையும் கட்டுப்படுத்தும் என ஜேர்மனி சுகாதாரத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் புதிய வகை கொரோனா வைரஸ் பரவி வருகிறது.

இந்த புதிய வகை வைரஸ் பழைய கொரோனா வைரஸைவிட மிகவும் வேகமாக பரவுகின்றமை ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதனால், அந்நாட்டில் பல பகுதிகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்மஸ்பண்டிகை கொண்டாட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் புதிய வகை கொரோனா பரவுவது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அந்நாட்டுடனான விமானப் போக்குவரத்தை இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் தடை செய்துள்ளன.

இதற்கிடையில், பைசர் நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசி கடந்த சில நாட்களுக்கு முன்னர் பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மார்டனா தடுப்பூசியும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அமெரிக்காவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஸ்புட்னிக் வி தடுப்பூசி ரஷ்யாவில் பயன்பாட்டில் உள்ளது.

தற்போது பிரித்தானியாவில் புதியவகை கொரோனா வைரஸ் பரவுவதால் தற்போதைய தடுப்பூசிகள் பயனளிக்காமல் செல்லலாம் என பரவலான கருத்துக்கள் நிலவி வந்தன.

இந்த நிலையில், ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள தடுப்பூசிகளே தற்போதைய புதிய கொரோனா வைரஸையும் கட்டுப்படுத்தும் என ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள சுகாதாரத்துறை விஞ்ஞானிகள் நம்புவதாக ஜேர்மனி சுகாதாரத்துறை அமைச்சர் ஜென்ஸ் ஸ்பான் தெரிவித்துள்ளார். (4)

## ஊரடங்கு...

சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது பயண தடை விதிக்கப்படாத பிரதேசங்களில் அத்தியாவசியமின்றி தனிமைப்படுத்த எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை என அவர் கூறியுள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் பயண தடை விதிப்பதற்கு எவ்வித அவசியமும் இல்லை என்ற போதிலும் அவசியம் ஏற்பட்டால் அதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## 64 தமிழ்...

உள்ளடங்கலாக 64 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

நேற்று முன்தினம் வரையில் 49 பேர் தொற்றுக்கு உள்ளான நிலையில் அடையாளம் காணப்பட்டிருந்ததாகவும் நேற்று மேலும் 15 பேர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மேலும் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 64 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பில் உள்ள ஐ.நா உயர்ஸ்தானிகராலயத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் குடும்பத்தார் தன்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்ததன் அடிப்படையில் தனக்கு குறித்த தகவல்கள் கிடைக்கப் பெற்றதாக கஜேந்திரகுமார் தெரிவித்தார். (ம-3)

## கொரோனா...

அமைப்பின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க எச்சரித்திருக்கிறார்.

அத்தோடு, ஏற்கெனவே தொற்றாத நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படும் பட்சத்தில் அவர்கள் மரணிப்பதற்கான வாய்ப்பு உயர்வாக உள்ளது.

எனவே அத்தகையவர்களை இனங்கண்டு, அவர்களுக்கு உரியவாறான சிகிச்சைகளை வழங்கி, மரணங்களைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார். (ம-3)

## 15 வயது...

டில் கோவிட் -19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 183ஆக உயர்வடைந்துள்ளது.

தங்கொட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுவன் ஒருவனும் உயிரிழந்துள்ளார். அவன் குருதிப் புற்றுநோயால் (Leukemia) பாதிக்கப்பட்டு மகரஹம அபேஸ்கா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளான்.

நாட்டில் ஜனவரி முதல் நேற்று வரை 38 ஆயிரத்து 59 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## பண்டிகைக்...

அரசாங்க அதிபர் க. மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போதுள்ள கொரோனா நிலைமை தொடர்பில் கருத்துரைக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது யாழ். குடாநாட்டில் கொரோனா தொற்று பரவுகின்ற வீதம் சற்று குறைவடைந்துள்ளது.

அர்ப்பணிப்புமிக்க சுகாதார பகுதியினருடைய சேவையின் காரணமாகவும் பொதுமக்களுடைய ஒத்துழைப்பினாலும் ஓரளவுக்கு தொற்று நிலைமையினை யாழ்.மாவட்டத்தில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறோம். இருந்தபோதிலும் அபாய நிலை இன்னும் நீங்கிவிடவில்லை என்றார். (ம-3,33,101)

## அமைச்சர்...

ஆரம்பிக்கும் இந்தியாவின் யோசனையை அடுத்து காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் ரோஹித அபய குணவர்த்தன இன்று ஆராயவுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரும் அமைச்சர் ரோஹித அபய குணவர்த்தன, ஊர்காவற்றுறையில் அமைக்கப்பட்டுள்ள வணிக கப்பற்றுறை செயலக உப அலுவலகக் கட்டடத் தொகுதியைத் திறந்து வைக்கிறார். (ம-3)

## போதனா...

தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் 412 பேருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் உரும்பிராய் பகுதியை சேர்ந்த ஒருவருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி - பாரதிபுரத்தை சேர்ந்த இருவருக்கும், முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தை சேர்ந்த 2 பேர் மற்றும் முல்லைத்தீவை சேர்ந்த ஒருவருக்குமாக நேற்று 6 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. (ம-3,18,316)

## இரு வான் கதவு...

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் நீர் மட்டம் உயர்ந்துவரும் நிலையில் நேற்று மாலை குளத்தின் இரு வான் கதவுகள் 6 அங்குலம் அளவுக்கு திறக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் வான் கதவுகளை திறந்து வைத்திருக்கின்றார்.

குளத்தின் நீர்மட்டம் 33 அடி 6 அங்குலமாக தற்போதுள்ள நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குளத்தின் இரு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளது. (ம-3,100,312)

## இலங்கைக்கு...

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர், உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதியொருவர், UNICEF நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி டிம் சடர்ன் மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடனான கலந்துரையாடலின்போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. (ம-3)

## இணை...

களின் காலவரையறையும் நிறைவடைந்து விட்டது. குறித்த தீர்மானங்கள் இரண்டும் மரணித்துப் போனமைக்கு சமமாகும்.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.நா. உறுப்புரிமை நாடுகளுடன் பேச்சு நடத்தி எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா அமர்வில் இலங்கைக்கு எதிராக புதிய பிரேரணை கொண்டு வருவதன் மூலம் உயிரிழந்த அந்த தீர்மானங்களை புதுப்பிக்க முடியாது.

அதேவேளை, புதிய பிரேரணையை நிறைவேற்றினாலும் அதற்கு இலங்கை இணை அனுசரணை வழங்காது.

அந்தப் பிரேரணையும் வலுவிழந்துதான் போகும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஜெனிவா விவகாரத்தை கையாளும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை விடுத்துள்ள அறிவிப்பு நகைப்புக்கிடமானது என்றார். (ம-3)

## குழந்தைகளை...

கும் குழந்தைகளை மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்யும் மோசடியில் ஈடுபட்ட ஒருவர் பொலிஸ் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண இதனைத் தெரிவித்தார்.

சுமார் 30 குழந்தைகள் மூன்றாம் தரப்பினருக்கு விற்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மூன்றாம் தரப்பினருக்கு குழந்தைகளை மாற்றுவது தொடர்பாக இலங்கையில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் சந்தேக நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்றார். (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



செவன
திகதி 22/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 314
Q 05 18 31 63

மெகா பவர்
திகதி 22/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0711
B 06 4 49 60 78

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/12/22
சீட்டிழுப்பு இலக்கம் 1559
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கங்கள் 09 37 46 56

மஹஜன சம்பத
திகதி 2020/12/22
சீட்டிழுப்பு இலக்கம் 4344
L 8 3 4 1 4 3

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 22.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2639
O 18 20 24 72

தன நிதானய
திகதி - 2020.12.22
சீட்டிழுப்பு இலக்கம் - 381
B 38 47 64 67

அத கோடிபதி
கிழமை: செவ்வாய்
சீட்டிழுப்பு இல: 1140
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 22.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 92,702,045
வெற்றி இலக்கங்கள் 46 50 53 58 W

சனிதா
கிழமை: செவ்வாய்
சீட்டிழுப்பு இல: 3470
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 22.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,122,786
வெற்றி இலக்கங்கள் 12 25 43 61 D

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,347,639/=
திகதி: 22.12.2020
வெற்றி வாரம்: 3021
வர்ணம்: சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 04 10 11 54
மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,301,680

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1314
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 22/12/2020
தினம் செவ்வாய்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
Y 03 08 31 45
அடுத்த சுப்பர் ஜக்பொட் 59,339,004

ஜய
667
22.12 2020
செவ்வாய்
H 07 11 62 80
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,470,250
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

**அறைகள் வாடகைக்கு**

யாழ். வேம்படிப் பாடசாலைக்கு அருகே அறைகள் வாடகைக்கு உண்டு.
( பெண்கள் மட்டும். ) (5031)

**077 923 8376**

**உடன் தேவை**

சிங்களம் சரளமாகப் பேசக்கூடிய பெண் உத்தியோகத்தர் தேவை.

தொடர்பு
**076 097 3126**

# சவுக்கு வெட்டிய 13 பேர் கைது

அரச காணிக்குள் அத்துமீறி சட்டத்துக் குப் புறம்பாக உள்நுழைந்தமை மற்றும் அரசுக்குச் சொந்தமான சவுக்கு மரத்தை விற்பனை செய்யும் நோக்கோடு வெட்டி யமை ஆகிய குற்றச்சாட்டில் 13 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டனர் என்று பருத்தித் துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் பயன்படுத்திய 3 பட்டா வாகனங்களும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்று பொலி ஸார் குறிப்பிட்டனர். (ம-03)


அதிமேதகு ஜனாதிபதியினதும்
கௌரவ பிரதமரினதும்
சிந்தனையின் செயல்வடிவம்


## வடக்கின் விவசாயப் புரட்சி

**North Lanka IIT City Campus**
**Faculty of Agriculture**

*Agriculture Research* உடன் இணைந்த பயிற்சி
கல்லூரியுடன் கூடிய *Modern Research Farm*
*Kariyalai Nakapaduvaan, Poonakary.*

Proposed by - S.A Balasubramaniyam Reading Ph.D
Rector - North Lanka IIT
City Campus,
Faculty of Agriculture.

Proposed Presented - Divisional Secretary
Divisional Secretariat,
Poonakary,
Kilinochchi.

Location -
Kariyalai Nakapaduvaan,
Poonakary Divisional.


NORTH LANKA RESEARCH FOUNDATION

**B.Sc விவசாய விஞ்ஞான பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

முதலாவது பிரிவில்
30 மாணவர்கள் மட்டுமே
அனுமதிக்கப்படுவர்.
U.G.C அங்கீகாரம் உடைய
பல்கலைக்கழகம்.

தகைமை - NVQ Level 04/ O/L / A/L
Duration: 03 Years
முழுநேரப் பயிற்சி
உடன் விண்ணப்பிக்கவும். (C-983)

இப்பிரிவு மாணவர்களுக்கு மாத்திரம் சான்றிதழ் கட்டணம் Rs. 200 000. இலவசம்.
வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன. தொடர்புகளுக்கு : 076 750 4535, 077 884 9677, 077 865 7957

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-899)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*


தொடர்பு: றாஜ் - 077 679 6623 (5026)

**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1150/=
5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு (C-981)
லண்டன் 1050/= இத்தாலி 1250/=
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது
எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்
070 330 5500 077 888 9388 075 330 5500

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 976,கேகேஎஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி தாழுக்காய் |

# மரண அறிவித்தல்



## கந்தசாமி நித்தியானந்தன்

பிறப்பு 21.07.1953 இறப்பு 21.12.2020

பன்னாலை, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நித்தியானந்தன் நேற்று முன்தினம் (21.12.2020) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - செல்வபூரணம் தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் பராசக்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தசீதரன் (சைவப் புலவர், சைவசித்தாந்த பண்டிதர், ஆசிரியர் ), றதிதரன் (தரன் பந்தல்), சுகிதரன் (கட்டார்), றகுதரன் (தேசிய சேமிப்பு வங்கி -நெல்லியடி), தனுஷா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சங்கானை), பகீதரன் (கட்டார்), கஜிதரன் (ஆசிரியர் - யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை), பாபுதரன் (ஆசிரியர் - யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துஷ்யந்தினி, இராஜகுமாரி, கஜேந்தி (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்), நந்தினி (விது பிறிசியர்ஸ் கலர் லாப்), புஸ்பன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான்), மரீன்ஷங்கா (ஆசிரியர் - யா/ வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனும் தணிகையன், சாருகாசினி, தசானிகா, வர்மிதா, அதீதன், பிரசன்யா, வேணுஜா, தரன்ஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.12.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-990)

பன்னாலை.
தெல்லிப்பளை.
077 395 6158
077 639 2636
தகவல்:-
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 09 . 11 . 1992



இறப்பு 04 . 01 . 2020

அமரர்

## மங்களதேவன் விஜயகுமார்

விஜி

கிளிநொச்சி, திருநகர் கிராமத்தில் பிறந்து இளமைக் காலத்திலேயே ஆன்மீகப் பணியில் தன்னை அர்ப்பணித்து தன்னாலான சமூகப்பணிகளையும், கிளிநொச்சி அருள்மிகு கிருஷ்ணர் ஆலயத்தின் பரிபாலன சபையின் செயலாளராகவும் ஆலய தேர்த் திருப்பணிச் சபையின் பொருளாளராகவும் இருந்து இறைபணியாற்றிய ஒரு பெருமகன். **மங்களதேவன் விஜயகுமார்** (விஜி) அவர்கள் தனது 28 வயதில் எவ்வித ஆசாபாசங்களுக்கும் இடம்கொடுக்காமல், இறைபணியே தன் பணியென செய்த அரும்பணிகள் அளப்பரியது.

அன்னாரது ஓராண்டு நினைவாக அன்னாரின் இல்லத்தில் இன்று (23.12.2020) புதன்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறுகின்றது. இந்நிலையில் அன்னாரின் ஆத்மா கண்ணன் காலடியில் சங்கமமாகி சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிப்பதுடன் ஓராண்டு நினைவஞ்சலியையும் நினைவுகூர்ந்து கொள்கின்றோம்.



இல. 1130, திருநகர் தெற்கு,
( மஞ்சுளா பேக்கரி சந்தி அருகாமை )
கிளிநொச்சி.
(C-977)
தகவல்:
கிளி. நகர் சனசமூக நிலையம்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.